# மார்ச்சிய உள்ளொளியில்
# உலக நிதி மூலதனம்

பிரபாத் பட்நாயக்



தமிழில்:
அ.குமரேசன்

# மார்க்சிய உள்ளொளியில் உலக நிதி மூலதனம்

(மூன்று கட்டுரைகள்)

பிரபாத் பட்நாயக்

தமிழில் : அ. குமரேசன்

பாரதி புத்தகாலயம்

MARXIYA ULLOLIYIL ULAGA NIDHI MOOLADHANAM

**Prathabath Patnaik**

**Translated by : A. Kumaresan**

First Published : January 2007

Published by:

**BHARATHI PUTHAKALAYAM**

421, Anna Salai, Teynampet, Chennai-600 018

☎: 044-24332424

**மார்க்சிய உள்ளொளியில் உலக நிதி மூலதனம்**

பிரபாத் பட்நாயக்

மொழியாக்கம் : அ. குமரேசன்

முதற் பதிப்பு : ஜனவரி 2007

வெளியீடு

பாரதி புத்தகாலயம்

421, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018

☎: 044-2433 2424

email: thamizhbooks@dataone.in

விற்பனை மையம்

7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 18

☎: 044-2433 2924

ரூ. 20/-

ISBN 81-89909-14-2

அச்சு : மகேந்திரா கிராபிக்ஸ், சென்னை - 14

அட்டை : ஸ்பேசஸ், சென்னை-3 அட்டை அச்சு : பிரிண்ட் ஸ்பெஷாலிடி

# I

# மார்க்சிய உள்ளொளியில் உலக நிதி மூலதனம்

*(புதுதில்லியில் 2006 ஏப்ரல் 5 அன்று 'லெஃப்ட் வெர்ட்' பதிப்பகம் நடத்திய இளம் ஆய்வாளர்களுக்கான கருத்தரங்கில் "மார்க்சியத்தின் இன்றியமையாமை" என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட உரை)*

சோவியத் யூனியன் இல்லாமலே போய்விட்டது. முதலாளித்துவத்தின் ஆதிக்கத்துக்கு இருந்து வந்த கம்யூனிச சவால் ஓய்ந்து போய்விட்டது. அதன் இடத்தில், முற்றிலும் மாறுபட்ட ஒரு சவாலாக பல இஸ்லாமிய இயக்கங்கள் வந்துள்ளன. வரலாறு நகர்ந்து நகர்ந்து பொதுவுடைமைக்கு அப்பால், அதன் அடிப்படையான அறிவியல் கோட்பாடாகக் கருதப்படும் மார்க்சியத்துக்கு அப்பால் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. இதற்குப் பிறகும் எதற்காக மார்க்சியத்தின் மீது ஆர்வம் கொள்ள வேண்டும்?

"மார்க்சியக் கோட்பாடு மகத்தான ஆற்றல் கொண்டது; ஏனெனில் அது உண்மையானது," என்று இதற்கு அற்புதமானதோர் பதிலளித்தார் லெனின். ஒரு கோட்பாட்டின் பலம் அது அரசு அதிகாரத்தைச் சார்ந்திருப்பதைப் பொறுத்ததல்ல என்ற மதிப்பு வாய்ந்த கருத்தை இந்த பதில் அழுத்தமாகக் கூறுகிறது. அதே நேரத்தில் பல்வேறு கேள்விகள் அந்த பதிலிலிருந்து எழுகின்றன. மார்க்சியம் என்றால் என்ன? "உண்மை" என்றால் என்ன பொருள்? "உண்மை"என்பதற்கு என்ன விளக்கமோ அந்த விளக்கத்தின்படி, மார்க்சியம் என்பதற்கு என்ன விளக்கம் அளிக்கிறோமோ அந்த மார்க்சியம் உண்மையானதுதான் என்று எப்படி நாம் அறிந்து கொள்வது? இப்படியாகப் பல கேள்விகள். இந்தப் பெரிய கேள்விகள் எதற்குமே இங்கே நான் பதில் சொல்ல முயலப் போவதில்லை. மார்க்சியத்தின் ஒரு குறிப்பிட்ட உள்ளொளி குறித்து, மார்க்சியத்துக்கு மட்டுமே உரிய அந்த உள்ளொளி குறித்து விவாதிப்பதோடு நிறுத்திக்கொள்கிறேன். மிகுந்த முக்கியத்துவம்

வாய்ந்த உள்ளொளி அது. முதலாளித்துவம் சுயமாக இயங்குவது, பங்கேற்பாளர்களின் விருப்பத்திற்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்டதாகத் தன்னைத் தானே இயக்கிக்கொள்வது என்ற கருத்தோட்டம் தொடர்பான மார்க்சிய உள்ளொளி அது.

இக்கருத்தோட்டம் குறித்தே இரண்டு அடிப்படையான விளக்கங்களை அளித்தாக வேண்டியுள்ளது. ஒன்று - முதலாளித்துவம் தன்னைத் தானே இயக்கிக்கொள்வது என்றால் அதன் செயல்பாட்டில் எந்தவொரு உணர்வுப்பூர்வமான தலையீடும் கிடையாது என்பதல்ல. முதலாளித்துவ அமைப்பின் செயல்பாட்டில் முதலாளித்துவ அரசு எப்போதுமே முக்கியப் பங்காற்றி வந்துள்ளது என்பது நமக்குத் தெரிந்ததுதான். உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் மட்டுமல்ல, முதலாளித்துவம் துவங்கிய காலத்திலிருந்தே முதலாளித்துவ அரசு முக்கியப் பங்காற்றி வந்துள்ளது. யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் "தேவை நிர்வாகம்" (டிமாண்ட் மேனேஜ்மென்ட்) என்பதில் அரசின் தலையீட்டைக் காண முடிந்தது. அதற்கு முன் இந்த "தேவை நிர்வாகம்" ஏற்பட்டதில்லை என்றாலும், முதலாளித்துவத்தைத் தாங்கி நிறுத்துவதில் வெவ்வேறு வடிவங்களில் அரசுத் தலையீடு எப்போதுமே ஒரு முக்கிய அம்சமாக இருந்து வந்துள்ளது. எனவே, முதலாளித்துவம் "தன்னைத் தானே இயக்கிக்கொள்கிறது" என்றால் அரசுத் தலையீடு இருக்காது என்று சொல்வதாகாது; மாறாக அரசுத் தலையீடு மூலமாகவே, சில நேரங்களில் வெவ்வேறு வடிவங்களில், அது தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது என்ற உண்மையைக் கூறுவதேயாகும். வேறு சொற்களில் சொல்வதானால், அரசுத் தலையீடானது முதலாளித்துவ அமைப்பின் இயக்கத்தில் உள்ள உள்ளார்ந்த போக்குகளை விரைவுபடுத்துவதாகவும் மேம்படுத்துவதாகவும் செயல்படுகிறது; சில நேரங்களில் அந்தப் போக்குகளை ஒரு நீண்ட காலத்திற்கோ அல்லது ஒரு குறுகிய காலத்திற்கோ கட்டுப்படுத்துவதாகவும் நிறுத்தி வைப்பதாகவும் செயல்படுகிறது. *ஆனால் ஒருபோதும் அவற்றைப் பின்னால் திருப்புவதாகவோ நிரந்தரமாக முடக்கி வைப்பதாகவோ அரசு செயல்படுவதில்லை.* வேறு வகையில் சொல்வதானால், அரசுத் தலையீட்டின் எல்லை, அதன் தன்மை ஆகியவற்றையேகூட முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த போக்குகள் கட்டுப்படுத்துகின்றன; *அரசுத் தலையீட்டின் தாக்கம்* என்பதையும் உள்ளடக்கிய தனது இயக்கத்தின் மூலமாகவே முதலாளித்துவ அமைப்பின் "சுய-இயக்கத்தன்மை" வெளிப்படுகிறது. இந்த இயக்கத்திற்கான அடிப்படைச் செயலூக்கம், அமைப்பின் பொருளாதாரத் தர்க்க நியாயத்திலிருந்து வருகிறது. இந்த இயக்கமே கூட, ஊகிக்கக்கூடிய

வகையில், எந்திரகதியானதல்ல; அடையாளம் காணத்தக்க சில உள்ளார்ந்த போக்குகள் வெறுமனே நடைமுறைக்கு வந்துவிடுகின்றன என்பதுமல்ல. அல்லது உணர்வுப் பூர்வமாகத் தலையிடக்கூடிய அமைப்பாகிய அரசின் தன்னிச்சையான கருத்துக்கள் வெறுமனே நடைமுறைக்கு வந்துவிடுகின்றன என்பதுமல்ல. சுருக்கமாகச் சொல்வதானால், முதலாளித்துவ அமைப்பின் இயக்க முறையானது முற்றிலும் முன்னதாகவே வகுக்கப்பட்டதல்ல; அதற்கு அவ்வாறு முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படும் திறனும் கிடையாது.

இந்த இயக்கமுறையில் உட்பொதிந்திருக்கும் சிக்கலான அமைப்பு காரணமாகவே "தன்னைத் தானே இயக்கிக்கொள்ளுதல்" என்ற சொல்லாடலை நாம் தேர்வு செய்திருக்கிறோம். பொருளாதார அறிஞர் ஆஸ்கர் லாங்கே பயன்படுத்திய "தன்னெழுச்சியானது" என்ற சொல்லை நாம் தேர்ந்தெடுக்கவில்லை. "தன்னெழுச்சியானது" என்ற சொல்லாடல் அமைப்பின் உள்ளார்ந்த போக்குகள் மாற்றமே இல்லாமல், இடையீடே இல்லாமல், திருத்தமே இல்லாமல் நடைமுறைக்கு வருகின்றன என்ற பொருளைத் தருகிறது.

இரண்டாவதாக, "தன்னைத் தானே இயக்கிக்கொள்கிற" அமைப்பு தொழிலாளர்களும் முதலாளிகளும் மட்டுமே இருக்கிற, கறாராக வரையறுக்கப்பட்ட தன்னந்தனியான ஒரு முதலாளித்துவப் பொருளாதாரத்தோடு சுருங்கிக்கொண்டதல்ல. முதலாளித்துவம் எப்போதுமே அப்படி தனிமைச் சிறப்புடன் ஏகாந்தமாக இருந்துவரவில்லை. அது எப்போதுமே முதலாளித்துவத்துக்கு முந்தைய பொருளாதார அமைப்புகளாலும் அரை - முதலாளித்துவப் பொருளாதார அமைப்புகளாலும் சூழப்பட்டே இருந்து வருகிறது. அவற்றுடன் அது தொடர்ச்சியான வினை- எதிர்வினை உறவு கொண்டே வந்திருக்கிறது. ஆனால், ஆய்வாளர் ரோஸா லக்ஸம்பர்க் கூறுவது போல அது அவற்றை முழுமையாகத் தன்வயப்படுத்திக்கொள்வதுமில்லை, அல்லது அவற்றை அப்படியே அவற்றின் தொன்மையான நிலையிலேயே விட்டு வைப்பதுமில்லை. இந்தக் கலவையான அமைப்பின் இயக்கமுறையைச் செலுத்துகிற பொருளாதார நியதி என்பது, இந்த அமைப்பிற்குள்ளேயே பொதிந்திருக்கும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் உள்ளார்ந்த போக்குகளோடு சம்பந்தப்பட்டதுதான். இருந்தபோதிலும் "அமைப்பு" என்ற சொல்லாடல் சுருக்கமாக இந்தக் கலவையான முறையைத்தான் குறிப்பிடுகிறது.

இந்த விளக்கங்களோடு நாம் இப்போது முதலாளித்துவ அமைப்பின் "தன்னைத் தானே இயக்கிக்கொள்கிற திறன்" பற்றிய விவாதத்திற்குத் திரும்புவோம்.

# 1. தன்னியக்க அமைப்பு

முதலாளித்துவம் ஒரு சுயமான செயல்பாடுள்ள, தன்னைத் தானே இயக்கிக்கொள்கிற பொருளாதார ஒழுங்கமைப்பைக் கொண்டிருக்கிறது என்ற கருத்து கார்ல் மார்க்ஸிடமிருந்து புறப்பட்டதல்ல. முதலாளித்துவத்தின் தன்னைத் தானே இயக்கிக் கொள்ளும் தன்மை பற்றி மார்க்ஸ் கூறியதன் குறிப்பிடத்தக்க அம்சம், மற்றவர்கள் கூறியதிலிருந்து மாறுபட்டதுதான். எனினும், தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் ஒழுங்கமைப்பு என்ற கருத்து அரசியல் பொருளாதாரம் முளைத்த காலத்திலேயே, ஃபிரெஞ்சு நாட்டின் பிசியோகிராட்டுகள் காலத்திலேயே, உருவாகி விட்டது. (பிசியோகிராட் என்போர், நிலத்துக்கு மட்டுமே வரிவிதிக்கப்பட வேண்டும், வர்த்தகத்தை முழுச் சுதந்திரத்தோடு விட்டுவிட வேண்டும் என்ற பொருளாதாரக் கோட்பாட்டைக் கொண்டிருந்த வர்கள்.) பொருளாதார முகவர்களுக்கிடையே தனிப்பட்ட முறை யில் நடைபெறும் பல்லாயிரக்கணக்கான கொடுக்கல் வாங்கல்கள் சேர்ந்து வெளிப்படையான ஒரு பொருளாதார ஒழுங்கைப்பை உருவாக்கியுள்ளன, அது மனித விருப்பங்களுக்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்டு சுயேச்சையாக இயங்குகிறது, அதற்கு ஒப்புவமை காட்டுவதென்றால் மனித உடலின் ரத்த ஓட்ட முறையைக் கூறலாம், இந்த அமைப்பின் பரிமாணங்களைப் புரிந்துகொள்வதற்கான சூக்குமம் உபரி அளவில் இருக்கிறது ஆகிய கருத்துக்கள் பிசியோ கிராட்டுகளின் அற்புதமான பங்களிப்புகளாகும்.

சுயமாக இயங்குகிற, தன்னைத் தானே இயக்கிக்கொள்கிற பொருளாதார ஒழுங்கைப்பு, அதற்கென சொந்தமாக ஒரு குணாம்சமும் தர்க்க நியாயமும் இருக்கின்றன, பகுத்தாய்வு செய்தால் கண்டுபிடிக்கக்கூடியவையாக அவை உள்ளன, அந்த ஒழுங்கமைப்பு தனிமனிதர்களின் பல்லாயிரக்கணக்கான செயல்பாடு களிலிருந்து உருவாகிறது, ஆனால் அத்தகைய செயல்பாடுகளின் திரட்சியோடு மட்டுமே அது சுருங்கி விடுவதில்லை என்ற கருத்தாக் கத்தை மேற்கொண்டு எடுத்துச் சென்றார் ஆடம் ஸ்மித். இந்த ஒட்டுமொத்த அமைப்பின் பண்புக்கூறு, அதை உருவாக்குகிற

தனிமனிதச் செயல்களின் பண்புக்கூறோடும் நோக்கங்களோடும் சுருக்கப்படக்கூடியதல்ல என்ற உண்மையை அவர் தமது புகழ்பெற்ற கருத்தின் மூலம் அடிக்கோடிட்டுக் கூறினார்: "கசாப்புக் காரர், மது காய்ச்சுபவர் அல்லது ரொட்டிக்காரர் ஆகியோரின் பெருந்தன்மையிலிருந்து அல்ல, அவர்களது சொந்த சுய நலத்திலிருந்தே நாம் நமது உணவை எதிர்பார்க்கிறோம்," என்றார் அவர். எழுத்தாளர் மாண்டேவில் தமது 'ஃபேபிள் ஆஃப் தி பீஸ்' (வண்டுகளின் கதை) என்ற நாவலில் "தனிப்பட்ட தீமைகள் பொது நன்மைகள் விளையக் காரணமாகின்றன" என்று கூறிய கருத்தைத் தான் இப்படி ஸ்மித் எதிரொலித்தார் என்று டாப் கூறினார் (இந்தக் கோட்பாட்டில் ஸ்மித் மாற்றுக் கருத்து கொண்டிருந்தார்).

சுருக்கமாகச் சொல்வதென்றால், ஒட்டுமொத்த அமைப் பானது அதன் அங்கங்களாக உள்ள கூறுகளின் மொத்தம் மட்டுமே யல்ல, அதிலிருந்து வேறுபட்டதாகும். அல்லது, "மனிதர்களின் செயல்களிலிருந்து அவர்கள் உணர்வுப்பூர்வமாக எண்ணியதற்கும் விரும்பியதற்கும் மாறுபட்ட ஒன்று உருவாகிறது," என்று ஹெகல் கூறியதைப் போன்றதுதான் அந்த ஒட்டுமொத்தத்தன்மை. ஆடம் ஸ்மித்தின் கண்ணோட்டம் ஹெகலின் கருத்தாக்கத்தை ஒட்டியிருந் ததில் வியப்பதற்கொன்றுமில்லை. ஏனெனில் அறிவுப்பூர்வ நிலைபாடுகளில் ஹெகலோடு பல வகைகளில் ஒத்திருந்த ஸ்காட்டிஷ் வரலாற்று அறிஞர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் ஸ்மித்.

"சுதந்திரச் சந்தைவாதிகள்" எனப்படுவோரின் முன்னோடி என இன்று பொதுவாக ஆடம் ஸ்மித் பற்றி சித்தரிக்கப்படுகிறது; தாட்சருக்கு முந்தைய தாட்சரியவாதி! அதைவிட சரியான சித்தரிப்பு வேறெதுவும் இருக்க முடியாதுதான். சந்தையின் செயல்முறை பற்றி மிக உறுதியான கோட்பாட்டைக் கூறியவர் லியான் வால்ரஸ். சுதந்திரச் சந்தைக்கு வக்காலத்து வாங்குகிற இன்றைய பல வாதங்கள் அவரது கோட்பாட்டையே பெரிதும் சார்ந்துள்ளன. ஆனால் ஸ்மித், வால்ரஸ் இருவரது கோட்பாடுகளுக்கிடையே மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. தனிமனிதர்கள் தன்னல அக்கறையால் வழிநடத்தப்படுகிறார்கள் என எடுத்துக்கொள்ளும் வால்ரஸ் கோட்பாடு, *"தனிமனித தன்னல அக்கறையை நிறைவேற்றிக் கொள்ள சிறந்த முறையில் உதவுகிறது"* என்ற அடிப்படையில் சுதந்திரச் சந்தையை நியாயப்படுத்துகிறது. இதற்கு மாறாக, தன்னல அக்கறைச் செயல்முறைகளால் தனிமனிதர்கள் வழிநடத்தப்படு கிறார்கள் என எடுத்துக்கொள்ளும் ஆடம் ஸ்மித் கோட்பாடு, *தனிமனிதத் தன்னல அக்கறையைச் சிறப்பாக நிறைவேற்றுகிறது* என்பதாக அல்லாமல், முற்றிலும் மாறுபட்ட முறையில் சுதந்திரச்

சந்தையை நியாயப்படுத்துகிறது. தனி மனித நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதாக சமுதாய முன்னேற்றம் நிகழ்கிறது, "தேசத்தின் செல்வம்" உயர்தல் என்ற வடிவில் அது நிகழ்கிறது என்று ஸ்மித் கோட்பாடு கூறுகிறது. சந்தையில் பங்கேற்பவர்களின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது என்று சந்தையின் பயன்பாட்டை மதிப்பீடு செய்வது என்பது ஸ்மித் கோட்பாட்டில்தான் இருக்கிறதேயன்றி வால்ரஸ் கோட்பாட்டில் இல்லை; அல்லது வால்ரஸ் கோட்பாட்டால் ஈர்க்கப்பட்ட சமகாலத்து "பிரதான நீரோட்ட" முதலாளித்துவப் பொருளாதாரக் கோட்பாட்டிலும் இல்லை.

முதலாளித்துவம் தானாகச் செயல்படுகிற, தன்னைத் தானே இயக்கிக்கொள்கிற ஒரு பொருளாதார ஒழுங்கைப்பு என்ற கருத்தாக்கத்தை கார்ல் மார்க்ஸ் தமது வரலாற்று முன்னோடிகளிடமிருந்துதான் எடுத்துக் கொண்டார். ஆனால், அதில் தமது சொந்த முத்திரையைப் பதித்தார். தானாகச் செயல்படும் ஒழுங்கமைப்பு குறித்து மார்க்சியத்துக்கும், அதற்கு முந்தைய கண்ணோட்டங்களுக்கும் இடையேயான கோட்பாட்டு ரீதியான வேறுபாடுகளின் விவரங்களுக்குள் செல்லாமல், ஆய்வு முறை அடிப்படையில் மூன்று முக்கிய வேறுபாடுகள் உள்ளன எனக் கூறலாம்.

முதலாவதாக, பொருளாதாரக் களத்தில் கண்ணுக்குப் புலப்படுகிற முக்கிய செயல்பாட்டாளராகிய "தனி மனிதர்" என்பவரை வரலாற்றுக்கு வெளியே இருக்கும் ஒரு கருத்துப் புனைவாக மார்க்ஸ் காணவில்லை; மாறாக வரலாற்றுப் பூர்வமாக உருவாக்கப்பட்டவராகக் கண்டார். தனி மனித நோக்கங்கள் வரலாற்றுப்பூர்வமாகக் கட்டுப்படுத்தப்படுபவை. முதலாளி என்பவரை "மூலதனத்தின் உருவாக்கம்" என்றே கார்ல் மார்க்ஸ் குறிப்பிடுகிறார். அதாவது, வரலாற்றின் வரம்புகளுக்குக் கட்டுப்பட்ட நோக்கங்களைக் கொண்ட, முதலாளித்துவ அமைப்பிற்குள் தாக்குப்பிடித்து நிலைத்திருக்க முயல்கிற எவர் மீதும் இந்த அமைப்பு (டார்வின் கூறிய போராட்டக் கோட்பாடு போல) செலுத்துகிற கட்டாய நிலைமைக்கு உட்பட்ட தனிமனிதர் ஒரு கருவியே. அமைப்பின் உள்ளார்ந்த போக்குகள் அந்தக் கருவியின் வழியே இயங்குகின்றன. முதலாளித்துவத்தின் கீழ் ஒரு சுதந்திரமான முகவர் போலத் தெரிகிற தனிமனிதர், உண்மையில் அதற்கு நேர்மாறானவரே ஆவார்.

இரண்டாவதாக, முன்னேற்றத்தையும் "தேசத்தின் செல்வம்" என்பதையும் உருவாக்குகிற சுயமான செயல்பாடுள்ள பொருளாதார ஒழுங்கமைப்பு என ஸ்மித் கூறியதைப் போலல்லாமல், பெருந்தன்மைப் பண்புகளுக்கு அப்பாற்பட்டதாகவே அதனைக் கண்டார் மார்க்ஸ். இந்தப் பொருளாதார ஒழுங்கமைப்பு சுரண்டல்

தன்மையுடையது மட்டுமல்ல, சுரண்டலுக்கு ஒரு முன் தேவையாக, தயார் நிலையில் இருக்கிற (வேலையில்லா) தொழிலாளர் படை ஒன்று இந்த ஒழுங்கமைப்புக்கு தேவைப்படுகிறது. ஆகவே, "தேசத்தின் செல்வம்" அதிகரிப்பதற்கு மாறாக, ஒரு முனையில் செல்வம் வளர்ந்து கொண்டிருக்க, எதிர் முனையில் அதற்குத் துணையாக வறுமை வளர்ந்துகொண்டிருக்கிறது.

இத்துடன் சேர்ந்தவைதான் முதலாளித்துவ செயல்முறைக்கு உள்ளேயே மூலதனக் குவிப்பு, முதலாளித்துவ செயல்முறையைச் சுற்றியுள்ள சின்னஞ் சிறு உற்பத்தியாளர்களின் உடைமை அபகரிப்பு, அவர்களது உற்பத்திக் கருவிகள் முதலாளிகளால் தட்டிப்பறிப்பு ஆகிய போக்குகள். இவ்வாறு ஒரு முனையில் வளம் குவிய மறுமுனையில் வறுமை வளர்வது, மூலதனக் குவிப்பால் சின்னஞ்சிறு உற்பத்தியாளர்களின் வழிகள் அடைக்கப்படுவது ஆகிய இந்த இரண்டு நடைமுறைகளும், ஒரே அடிப்படையான போக்கின் இரண்டு பக்கங்களேயாகும். மார்க்ஸ் குறிப்பிட்டது போல், "ஒரு முதலாளி பலரைக் கொல்கிற" போக்கு அது. ஒரு முதலாளிக்கு இரையாகும் அந்த "பலர்" என்பதில் சிறு உற்பத்தி யாளர்கள், சிறு முதலாளிகள் ஆகியோரும் அடக்கம். மூலதனக் குவிப்பெனும் இந்த மகா நடைமுறையின் விளைவாக, வேலையில் உள்ள தொழிலாளர் படையோடு ஒப்பிடுகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் தொழிலாளர் படையின் அளவு மேலும் மேலும் அதிகரிக்கிறது; ஒரு முனையில் உள்ள செல்வ வளத்திற்கும் மறுமுனையில் உள்ள வறுமைக்கும் இடையேயான வேறுபாடு வீங்குகிறது (இந்த வேறுபாடு *உலகளாவிய* அளவில் வெளிப்படக் கூடியதேயாகும்). பொதுவான அதிக உற்பத்தியால் நெருக்கடிகள் ஏற்படக்கூடும் என்பதை 'ஸேய் விதி' என்ற பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்வாளர் ரிச்சர்டோ மறுத்தார், ஆனால் கார்ல் மார்க்ஸ் உறுதிப்படுத்தினார். எந்த அளவுக்கு அந்த மிகை உற்பத்தியால் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் இந்த அமைப்பை பாதிக்கின்றனவோ அந்த அளவுக்கு, உடைமைகளை இழந்தோர், வேலையற்றோர், வறியோர் ஆகியோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

மூன்றாவதாக, அரசுத் தலையீடு குறித்த மதிப்பீட்டில் மார்க்ஸுக்கும் அவருக்கு முந்தைய ஆய்வாளர்களுக்கும் இடையே ஒரு அடிப்படையான வேறுபாடு உண்டு. முதலாளித்துவ அமைப்பின் தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் திறனில் அரசுத் தலையீட்டிற்கு உள்ள பங்கு என்ன என்பதை நிர்ணயிப்பதிலும் அந்த வேறுபாடு உண்டு. மரபுவழிப்பட்ட அரசியல் பொருளாதாரக் கோட்பாடு அரசுத் தலையீடு என்பதையே ஒழித்துக்கட்ட

வேண்டும் என வாதிட்டது. அடிப்படையில், வர்த்தக யுகத்தின் ஏகபோகங்களையும் வரம்புகளையும் பாதுகாத்துப் பராமரிப்பது தான் அரசுத் தலையீட்டின் நோக்கம்; ஆனால் அதுவோ தொழில் முதலாளித்துவம் தலைதூக்குவதற்குத் தடைக் கற்களைப் போட்டது; எனவே அரசுத் தலையீடு இல்லாத ஒரு சுயமான செயல்பாடு உள்ள, தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் பொருளாதார ஒழுங்கமைப்பு உருவானது என மரபு வழிக் கோட்பாடு பேசியது. வேறு சொற்களில் சொல்வதானால், பொருளாதார ஆதிக்கம் மட்டுமே உள்ள ஒரு அமைப்பை அது மையப்படுத்தியது. ஆனால் மார்க்ஸ், முதலாளித்துவ அரசுடன் சேர்ந்துதான் முதலாளித்துவ அமைப்பு முழுமையடைகிறது என்றார், அதன் தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் தன்மை, முன்னரே குறிப்பிட்டது போல், அதற்குத் தலைமை தாங்குகிற அரசின் தலையீடு என்பதையும் உள்ளடக்கிய அமைப்பைச் சார்ந்ததேயாகும் என அவர் நிறுவிக் காட்டினார்.

இவையனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், முதலாளித்துவப் பொருளாதார ஒழுங்கமைப்பின் தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் தன்மை பற்றி மார்க்ஸ் முன்வைத்த கோட்பாடு தனித்துவம் மிக்கது என்பது தெளிவாகப் புலப்படும். ஒரு முனையில் அதிகரிக்கும் வறுமைத்துயரங்களையும் மறுமுனையில் அதிகரித்து வரும் செல்வ வளங்களையும் உற்பத்தி செய்வதே இந்தப் பொருளாதார ஒழுங்கமைப்பின் போக்கு; இது ஒரு "இயற்கையான ஒழுங்கமைப்பு" அல்ல, "இயற்கை விதிகளுக்கு" உட்பட்டதும் அல்ல; ஆகவே மானுட விடுதலையை நிலைநாட்ட வேண்டுமெனில் இதனைத் தூக்கியெறிந்தாக வேண்டும், முதலாளித்துவ சொத்து உறவுகளின் உச்சியில் நிற்கிற ஒரு அரசு, முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த போக்குகளை ஒருபோதும் பின்னுக்குத் திருப்பவோ, நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தவோ இயலாது என்பதே தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் தன்மை என்பதன் அர்த்தம்; சொத்து உறவுகளில் எந்த ஒரு மாற்றத்தையும் அரசு ஏற்படுத்திவிட முடியாது; ஆகவேதான், உற்பத்திக் கருவிகளை சமூக உடைமையாக்குவதற்கு சாதகமான ஒரு மாற்றம் கட்டாயத் தேவையாகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு வந்ததோடு வரலாறு தனது இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டதாக மரபு வழி பொருளாதார ஆய்வாளர்கள் நம்பினார்கள். "ஒரு வரலாறு இருந்திருக்கிறது, ஆனால் இனி எந்தவொரு வரலாறும் இருக்காது" என்று அவர்கள் கருதினார்கள். ஆனால், அது ஒரு முதலாளித்துவ மாயைதான் என்பதை, முதலாளித்துவத்தின் தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் ஒழுங்கமைப்பு எப்படிப்பட்டது என்ற மார்க்ஸ் மதிப்பீடு எடுத்துக்காட்டிவிட்டது.

ஆய்வுமுறை சார்ந்த ஒரு கருத்தை இங்கே விளக்கிட வேண்டியுள்ளது. இயக்கம் என்பதோடு இயற்கையின் நிகழ்வு என்பதையும் இணைத்துப் பார்ப்பது மார்க்சியத் தத்துவத்தின் ஒரு உறுதியான போக்காக இருந்து வருகிறது. முதலாளித்துவ ஒழுங்கமைப்பின் இயக்கம் அல்லது அதன் இயக்க விசை பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையில், அது முடிவுக்கு வருவதும் சமூக உடைமையாகிய சோசலிசத்துக்கு மாறுவதும் தவிர்க்கவியலாதது என்று மரபு வழி மார்க்சியக் கோட்பாடு கூறுகிறது. அதாவது, முதலாளித்துவ அமைப்பின் இயக்கவிசை அதன் இயற்கையான நிகழ்வுப் போக்கிலிருந்து, அதன் முடிவை நோக்கி, தவிர்க்க முடியாததாகிய அதன் இறுதிக் கட்டத்தை நோக்கிச் செல்வதி லிருந்து வேறுபடுத்திக் காணவியலாததாகும். இதற்கு மாறாக, மார்க்சியம் குறித்த இயற்கை நிகழ்வுப் போக்கு சாராத விளக்கங்கள் முதலாளித்துவ அமைப்பின் தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் தன்மைக்கு அடிப்படையாக உள்ள அதன் தன்னெழுச்சியான இயக்க விசையைக் குறைத்து மதிப்பிடுவதாக உள்ளன. அல்தூசர் போன்றவர்களின் விளக்கங்கள் அவ்வாறு குறைத்தே மதிப்பிடு கின்றன. "கடைசி நிகழ்வாகக்கூட" பொருளாதார மூலக்கூறு எவ்விதத்திலும் தீர்மானிக்கக்கூடிய பங்காற்றவில்லை என்று அவர்கள் மறுத்தனர். "முதலிலிருந்து கடைசி வரையில் கடைசி நிகழ்வு என்பதன் தனிமைத்தன்மை என்பது ஏற்படுவதேயில்லை," என்று அல்தூசர் கூறியது இதற்குச் சான்றாகும். மேற்கூறிய இரண்டு ஆய்வுமுறைகளுமே இயற்கை நிகழ்வுப் போக்கும் இயக்கவிசையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துப் பார்க்க முடியாதவாறு இணைந்துள்ளன என்றே கூறுகின்றன. எப்படியானாலும், சோசலிசத்தைத் தவிர்க்கவியலாததாகக் காண்பதைவிட, கட்டாயத் தேவையாகக் காண்பது, முதலாளித்துவ ஒழுங்கமைப்பின் இயக்க விசையை, அதன் தன்னைத் தானே இயக்கிக்கொள்ளும் தன்மையை, பொருளாதாரத்தின் ஆட்சியிலிருந்து அது வருகிறது என்பதை, "கடைசித் தருணத்தில்" அதுவே தீர்மானிக்கிறது என்பதை மறுப்பதாகாது.

# 2. தேவை நிர்வாகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

முதலாளித்துவ உற்பத்தி முறைக்குத் தலைமை தாங்குகிற அரசு (அதன் தலைமைக் கூறுகளுக்கு எத்தகைய அகச் சார்புகள் இருந்தாலும் அது ஒரு முதலாளித்துவ அரசுதான்) அந்த உற்பத்தி முறையைப் பின்னுக்குத் திருப்புகிற அளவுக்கு அல்லது நிரந்தரமாக முடக்குகிற அளவுக்குத் தலையிட முடியாது என்ற மார்க்சிய நிலைபாடு, கெய்ன்சியம்[1] கூறுகிற தேவை நிர்வாகத்தின் வரலாற்றிலும் நிருபணமாகிறது. உலக யுத்தத்தின் முடிவில் முதலாளித்துவம் அலங்கோலமாக இருந்தது. ஒரு பக்கம் விரிவடைந்த சோசலிச முகாமின் சவால், இன்னொரு புறம் உள்நாட்டுத் தொழிலாளி வர்க்கத்தின் சவால். பாசிசத்துக்கு எதிரான யுத்தத்தில் மிகப்பெரும் தியாகங்களைச் செய்திருந்த தொழிலாளி வர்க்கம், பொருளாதாரத் தேக்க நிலையும் வேலையின்மையும் தாண்டவமாடிய யுத்தத்திற்கு முந்தைய ஆண்டுகளுக்குத் திரும்பிச் செல்ல கொஞ்சமும் தயாராக இல்லை. முதலாளித்துவ நாடுகளின் உற்பத்தி வசதிகள் அந்த யுத்தத்தாலேயே பெருமளவுக்கு அழிந்து போயிருந்தன. தேச விடுதலைப் போராட்ட அலைகளின் எழுச்சியால் ஏகாதிபத்தியக் கட்டமைப்பு மொத்தமும் கலங்கிப் போயிருந்தது. இந்தப் பின்னணியில்தான், தான் நிலைத்திருக்க வேண்டுமானால் விட்டுக் கொடுத்தாக வேண்டும் என்ற கட்டாயம் முதலாளித்துவத்திற்கு ஏற்பட்டது. காலனியாதிக்கத்தை - மூன்றாம் உலக நாடுகளின் கனிம

---

1. கெய்ன்சியம்: பிரிட்டனைச் சேர்ந்த ஜான் மெய்னாட் கெய்ன்ஸ் (1883-1946) என்பவர் உருவாக்கிய ஒரு முதலாளித்துவப் பொருளாதாரக் கோட்பாடு. தேவை நிர்வாகம் எனும் பொருளாதாரக் கட்டுப்பாட்டின் ஒரு பகுதியாக அரசாங்கத்தின் பொதுப் பணிகள் மூலம் முழுமையான வேறு வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்ப நுகர்வோர்கள் வாங்கும் சக்தியை அதிகரிக்க வருமான மறு விநியோகத்தை மேற்கொள்தல் போன்ற கருத்துக்களை வலியுறுத்தியவர். உலக வங்கி, பன்னாட்டு நிதியம் உருவாகக் காரணமானவர்களில் ஒருவர்.

வளங்கள் மீது தனக்கிருந்த கட்டுப்பாடு உட்பட (அதை விடாம லிருக்க தீவிரமாக முயன்றது என்றாலும்) - விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. உள்நாட்டு வேலைவாய்ப்புகளை உயர்ந்த அளவுகளில் பராமரித்தாக வேண்டியிருந்தது; அதற்காகத் தேவை நிர்வாகம் என்பதை மேற்கொண்டாக வேண்டியதாயிற்று. சமூகப் பாதுகாப்புக்காகக் கொஞ்சமாவது வழிசெய்ய வேண்டியதாயிற்று (அதற்கான செலவில் பெரும்பகுதி தொழிலாளர்கள் மீதே பலவித வரிகளைப் போட்டு வசூலிக்கப்பட்டது என்றாலும்கூட). இந்தச் சலுகைகளெல்லாம் 'பனிப்போர்' எனும் (அன்றைய சோசலிச சோவியத் யூனியனுடனான) கெடுபிடி யுத்த மோகத்துடன் சேர்ந்தே வந்தன.

தேவை நிர்வாகத்தின் நோக்கங்கள் எதுவானாலும், அதன் விளைவுகள் கவர்ச்சிகரமாகவே இருந்தன. வேலையின்மை விகிதம் பெருமளவு வீழ்ச்சியடைந்தது. அறுபதாம் ஆண்டுகளின் மத்தியில் பிரிட்டனின் வேலையின்மை வளர்ச்சி வேகம் ஆண்டுக்கு 2 சதவீதமாகக் குறைந்தது. அமெரிக்காவில் அது 4 சதவீதமாகக் குறைந்தது. முதலாளித்துவ வரலாற்றில் இந்த அளவுக்கு வேலை யின்மை வீழ்ச்சி எப்போதுமே நிகழ்ந்ததில்லை. அதிகத் தேவை காரணமாக முதலீட்டு வீதமும் அதனோடு சேர்த்து வளர்ச்சி வீதமும் அதிகரித்தன. அதன் காரணமாக ஐம்பது - அறுபதாம் ஆண்டுகளில் மிக அதிகமான பொருளாதார வளர்ச்சி வீதம் ஏற்பட்டது. அந்த இருபதாண்டு கால வளர்ச்சி வீதம் போல் முதலாளித்துவத்தின் வரலாற்றில், அவ்வளவு நீண்ட காலத்துக்கு வேறெப்போதும் நிகழ்ந்ததில்லை. இரண்டு உலக யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பல புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. (பொருளாதாரச் சரிவின் காரணமாக அவை நடைமுறைப்படுத்தப் படாமல் இருந்தன). அறிவியல் தொழில் நுட்பப் புரட்சியும் ஏற்பட்டது (அதன் வேராக யுத்தங்களை நடத்துவதற்கான அறிவியல் முன்னேற்றங்களும் இருந்தன). அவ்வாறு பயன்படுத்தப் படாமல் இருந்த புதிய கண்டுபிடிப்புகளும் அறிவியல் தொழில் நுட்பப் புரட்சியுமாகச் சேர்ந்து, புதிய சூழலில் தொழிலாளர்களது உழைப்பாற்றல் சார்ந்த உற்பத்தித்திறன் அதிகமான வேகத்தில் வளர்ச்சியடைவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தின. வேலை யின்மையின் வளர்ச்சி வீதம் குறைந்திருந்ததால், தொழிலாளர்களின் பேரம் பேசும் வலிமை அதிகரித்தது. உற்பத்தித் திறனில் ஏற்பட்ட வளர்ச்சியை உண்மையான கூலி உயர்வுகளாக மாற்றக்கூடிய அளவுக்கு பேர வலிமை அதிகரித்தது. அதிக (பொருளாதார) வளர்ச்சி, குறைவான வேலையின்மை, அதிகமான உற்பத்தித்திறன் வளர்ச்சி, அதிகமான உண்மைக் கூலி உயர்வு, சமூகப் பாதுகாப்புக் கான சட்டப்பூர்வ ஏற்பாடுகள் ஆகியவை முன்னெப்போதுமே

இல்லாத அளவுக்கு ஏற்பட்டன. இவை அனைத்தும், காலனி யாதிக்கம் தகர்க்கப்பட்ட காலகட்டத்தில் ஏற்பட்டன. இவை எல்லாமாகச் சேர்ந்து, சில ஆய்வாளர்கள் கூறுவது போல "முதலாளித்துவத்தின் பொற்காலம்" என்பதாக அந்தக் காலகட்டத்தை ஆக்கின. (அதே காலகட்டத்தில்தான் வியட்நாம் மீதான வஞ்சக ஆக்கிரமிப்பு யுத்தத்தை அமெரிக்கா தொடுத்தது; அதன் நாசகரத்தன்மை ஒரு புறம் இருந்தபோதிலும் அந்தக் காலகட்டம் முதலாளித்துவத்தின் பொற்காலமாக சித்தரிக்கப்பட்டது).

முதலாளித்துவம் எத்தகைய மாற்றத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அந்த நிலையை அடைந்துள்ளதாக ஒரு கருத்து பரப்பப்படுகிறது. "முதலாளித்துவம் மாறிவிட்டதா" என்ற தலைப்பில் அண்மையில் ஒரு ஆய்வரங்கம் நடத்தப்பட்டது. ஜே.கே. கால்பிரய்த், ஷிகேடோ டிசுரு போன்ற பொருளாதார ஆய்வாளர்கள் அதில் கலந்து கொண்டனர். பொதுவாக அவர்களில் பலரும் மேற்படி கேள்விக்கு "ஆம்" என்பதாகவே பதிலளித்தனர். ஒரு காலத்தில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் தத்துவ ஆசானாகத் திகழ்ந்தவரான ஜான் ஸ்ட்ராச்சே என்பார், "பேரரசின் முடிவு" என்ற ஒரு புத்தகம் எழுதினார். அதில் அவர், கெய்னீசிய பொருளாதாரக் கோட்பாட்டின்படி தேவை நிர்வாக நடைமுறையால் ஏகாதிபத்திய ஆதிக்கம் என்பது தேவையில்லாமல் போய் விட்டது என்று வாதிடுகிறார். பொருள் நுகர்வு என்பது (உற்பத்தியைவிட) மிகக் குறைவாக இருந்த நிலையில் அந்தப் போக்கிற்கு எதிரான ஒன்றாகவே ஏகாதிபத்தியம் உருவானது என்றார் அவர். இப்போது அதற்கான தேவை இல்லாமல் போய்விட்டதால், ஏகாதிபத்தியம் பற்றிய லெனின் மதிப்பீடு காலாவதியாகி விட்டது என்றும் அவர் கூறியுள்ளார். சுருக்கமாகக் கூறுவதென்றால் - உழைக்கும் வர்க்கத்தின் ஆதரவோடு கூடிய ஒரு சமூக ஜனநாயக அரசாங்கத்தால் நடத்தப்படும் முதலாளித்துவ அரசு அமைப்பு போதுமான அளவுக்கு முதலாளித்துவத்தை சீர்திருத்தி விடும், முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த போக்குகளைத் தடுத்து நிறுத்திவிடும் என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. முழுமையான வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடியதாக, வருமானத்திலும் வளத்திலும் உள்ள ஏற்றத்தாழ்வான நிலைகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக, மையத்திலிருந்து வெகுதூரம் விலகியிருக்கக்கூடிய முதலாளித்துவத்துக்கு முந்தைய, அரை முதலாளித்துவ அமைப்புகளைக் கட்டுப்படுத்தும் மேலாண்மையைத் தேவையற்றதாக்கக் கூடியதாக முதலாளித்துவத்தை சமூக ஜனநாயக அரசாங்க அமைப்பு மாற்றிவிடும் என்கிறார்கள். மேலும், முதலாளித்துவத்தை ஒரு "நல அரசு" என்பதாக மாற்றிவிடும் என்று கூறுகிறார்கள். சோசலிச நாடுகளால் கட்டப்பட்ட அளவுக்கு ஈர்க்கத் தக்கதாக

இல்லை என்றாலும், நிச்சயமாக ஒரு "நல அரசாக" மாற்றிவிட முடியும் என்றும் கூறுகிறார்கள். உலக முதலாளித்துவத்தின் நீண்ட செழிப்பினைத் தக்கவைப்பதில் (அதற்குத் தலைமைதாங்கும் அமெரிக்காவின்) ராணுவச் செலவினங்களுக்கு ஒரு முக்கியப் பங்கு இருக்கிறது என (பாரன், ஸ்வீஸி போன்ற) மார்க்சிய ஆய்வாளர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும், முன்னெப்போதும் முதலாளித்துவ வரலாற்றில் நடந்திராத அந்த நீண்ட செழிப்பு, காலனியாதிக்கம் தகர்க்கப்பட்டதன் பின்னணி ஆகியவற்றை மறுப்பதற்கில்லை.

மேற்படி "பொற்காலம்" தகர்ந்தது, அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சிப் போக்குகள், பொது மக்கள்தான் அதன் வலிகளை ஏற்க வேண்டியதானது - என்பவையெல்லாம் மார்க்சியம் எவ்வளவு சரியானது என்பதை மெய்ப்பிக்கின்றன. கிட்டத்தட்ட முழுமையான வேலைவாய்ப்பு, அதாவது உள்நாட்டு வேலையில்லாத் தொழிலாளர் படையின் எண்ணிக்கை வற்றிப் போன நிலையும் பொருளாதார செழிப்பு நிலையும், காலனியாதிக்கம் தகர்க்கப்பட்ட பின்னணியில், அடிப்படை உற்பத்தியாளர்களுக்கு எதிரானதாக வர்த்தக நடைமுறைகள் அளவுக்கு மாறுவதை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தவிர்க்கின்றன. அதே நேரத்தில் இந்த நிகழ்ச்சிப் போக்குகள் பணவீக்கத்தையும் "கூலி அலகு" என்பது நிலைகுலைந்துபோவதையும் தவிர்க்கவியலாமல் உள்ளடக்கியுள்ளன. சமுதாயத்தின் மொத்த உற்பத்திக்குப் பங்களிக்கிற சூதாட்டத்தில் முதலில் பந்தயத்தொகை கட்டுகிறவர்கள் போன்ற பல்வேறு தரப்பினர் கோருகிற ஈவுப்பங்குகள், அந்த சமுதாய உற்பத்தியின் அளவுக்கும் அதிகமாகப் போகிறபோது பணவீக்கம் ஏற்படுகிறது. உண்மையான பங்கீட்டுக் கோரிக்கைகள் அல்லது பந்தயம் முடிந்தபின் எழுகிற பங்குக் கோரிக்கைகள் அந்த ஒட்டுமொத்த சமுதாய விளைச்சலுக்கு மேல் போகக் கூடாது என்றால், அவ்வாறு கோருபவர்களில் ஒரு தரப்பினர் ஏமாற்றப்பட்டாக வேண்டும். தங்களுக்குக் கிடைக்கிற பங்காக அவர்கள் நினைப்பதற்கும் உண்மையாகவே அவர்களுக்குக் கிடைப்பதற்கும் இடையே வேறுபாடு இருக்க வேண்டும். அந்த வேறுபாடு பணவீக்கத்தால் ஏற்படுகிறது. ஏமாற்று வேலைக்கான கருவியாகப் பணவீக்கம் பயன்படுகிறது. ஆனால் பங்கீட்டுக் கோரிக்கையாளர்களில் சிலர் மிக பலவீனமானவர்களாக, தங்களது பந்தயப் பிணைத்தொகையை வற்புறுத்த முடியாதவர்களாக, ஆட்டத்தின் சுமைகளை மட்டும் தாங்கக்கூடியவர்களாக இருப்பார்களேயானால் பணவீக்கத்திற்குத் "தேவை" இருக்காது. வேலையில்லாத் தொழிலாளர்களின் தயார் நிலைப் படை ஒன்று பெரிய அளவுக்கு இருப்பது, தொழிலாளர்களை அப்படிப்பட்ட அடக்கமான சுமைதூக்கிகளாக மாற்று

கிறது. உலகப் பொருளாதாரத்தின் சரிவோ, அல்லது (உள்நாட்டுப் பயன்பாட்டைக் குறைப்பதற்காக விருப்பம் போல் பணப்புழக் கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய) அடிப்படைத் தயாரிப்பு நாடுகளின் மீதான காலனியாதிக்கக் கட்டுப்பாடோ அடிப்படைத் தயாரிப் பாளர்களை சுமைதூக்கிகளாக மாற்றிவிடக்கூடும். ஆனால் மேற்படி "பொற்காலம்" அதிகமான வேலையின்மையையும், காலனியாதிக்க வீழ்ச்சி சூழலில் அதிகமான உலகப் பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியிருந்தது. இதனால் பணவீக்கத்தின் மீதான கட்டுப்பாடும், பொதுவாக உலக முதலாளித்துவ அமைப்பின் மீதான கட்டுப்பாடும் தகர்ந்தன.

எனினும், இந்த முரண்பாடுகள் முற்றுவதற்கு சிறிது காலம் பிடித்தது; வியட்நாம் யுத்தத்தின் பணவீக்க விளைவுகள் காரணமாக அந்த முரண்பாடுகள் நெருப்பாகப் பரவின (சொல்லப்போனால் மூட்டி விடப்பட்டன); இறுதியாக அவை "பொற்காலம்" முடிவுக்கு வரக் காரணமாகின. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் ஒரு வெடிப்பாக ஏற்பட்ட கூலி உயர்வு, பிரெட்டன் உட்ஸ்[2] பொருளா தாரக் கோட்பாட்டில் ஏற்பட்ட தகர்வு, (டாலர் மதிப்பு நிலையற்ற தாக இருந்தபோது) பயன்பாட்டுப் பொருள்களாகிய சரக்குகளுக் கான ஓட்டத்தின் காரணமாக ஒரு வெடிப்பு போல் ஏற்பட்ட விலை உயர்வு, அதைத் தொடர்ந்து சரக்குகளுக்கான அந்தப் பரபரப்பு அடங்கியதால் பெட்ரோலிய எண்ணெய் தவிர்த்து இதர அனைத்துப் பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகிய நிகழ்ச்சிப் போக்குகள் நீண்ட காலத் தேக்க நிலையையும் அதிகமான வேலையின்மையையும் தொடங்கி வைத்தன. முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் இன்றளவும் இதனால் பீடிக்கப்பட் டுள்ளன. சமூக ஜனநாயக அமைப்பு ஒரு "சமூகக் கட்டுப்பாடு" மூலமாக வகுக்கப்பட்ட ஒரு "வருமானக் கொள்கை" என்பதைக் கொண்டு கிட்டத்தட்ட ஒரு முழுமையான வேலைவாய்ப்பைப் பராமரித்துக்கொண்டே, பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஆரம்பத்தில் முயன்றது. ஆயினும் அந்த முயற்சி தோல்வியடைந்தது. முதலாளித்துவம் பற்றிய மார்க்சிய மதிப்பீடு எவ்வளவு சரியானது என்பதையே அந்த தோல்வி காட்டுகிறது.

அண்மை ஆண்டுகளாக, முன்னேறிய நாடுகளில் பணவீக்கம் வெகுவாகக் குறைந்திருந்தாலும் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றமில்லை. இதற்கு காரணமான இரண்டாவது அம்சமும்

---

2. பிரெட்டன் உட்ஸ் : உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற நிறுவனங்களை உருவாக்க முடிவு செய்து ஐ.நா. அமைப்பின் மாநாடு நடந்த இடம். மாநாட்டில் உருவாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை "பிரெட்டன் உட்ஸ் கோட்பாடு" என குறிப்பிடப்படுகிறது.

மார்க்சிய மதிப்பீட்டை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. இது, புதிய வடிவமாக உருவெடுத்த பன்னாட்டு நிதி மூலதனத்தோடு தொடர்புடையதாகும். அது எப்படித் தோன்றி வளர்ந்தது என்ற வரலாற்றுக்குள் இப்போது நாம் செல்லத் தேவையில்லை. "பொற்காலம்" என்று சொல்லப்பட்ட காலத்திலேயே நிகழ்ந்த மூலதன மையக்குவிப்பு என்ற நடைமுறையின் வெளிப்பாடுதான் நிதி மூலதனம். அதன் உலகளாவிய தன்மை, உலகளாவிய செல்வாக்கு, தொழில்துறையோடு நீண்ட காலப் பிணைப்பு என்பதில் சிக்கிக்கொள்ளாத உடனடி ஊக வணிக ஆதாயங் களுக்காக இடையறான தேடுதல் வேட்டை ஆகியவை அதன் மையமான கூறுகளாகும். ஏகாதிபத்திய சக்திகளுக்கிடையேயான மோதல் போட்டிகள் அண்மைக் கால வரலாற்றில் வேறு எந்தக் காலகட்டத்தையும்விட அதிகமான அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட் டுள்ளன. மோதல் போட்டிகளால் உலகம் பிளவுபட்டு அதனால் தனது சுதந்திரமான செயல்பாடுகளுக்குத் தடைகள் ஏற்படுவதை ஏகாதிபத்தியம் விரும்பவில்லை - அந்த சுயநலத்திலிருந்தே மோதல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய சூழலில்தான் நிதி மூலதனம் தோன்றி வளர்ந்தது.

இந்த நிதி மூலதனம், அரசியல் காரணங்களுக்காகவும் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் வேலைவாய்ப்பு, மக்களுக் கான செயல்பாடு போன்றவற்றில் முனைப்புக் காட்டக்கூடிய ஒரு அரசு என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக தன்னைத் திருப்திப்படுத்துவதை நோக்கியே அரசின் செயல் முனைப்புகள் அமைய வேண்டும் என்றே நிதி மூலதனம் விரும்புகிறது. நிதி மூலதனம் என்பது உலகளாவியதாக இருக்கிறது என்றால், அரசு என்பது குறிப்பிட்ட ஒரு நாட்டின் அரசாகவே இருக்கிறது. இதனால், நிதி மூலதனத்தின் நிலையற்ற தன்மை ஒரு தன்னியல்பான விளைவை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. அதாவது, அதன் விருப்பங்களுக்கு மாறாகச் செல்லத் துணிகிற எந்தவொரு அரசும் அதன் "நம்பிக்கையை இழக்கும்" நிலையையும் அதைத் தொடர்ந்து அந்த நாட்டிலிருந்து மூலதனம் வெளியேறக் கூடிய நிலையையும் சந்திக்க வேண்டியதாகிறது. வெளிநாட்டு முதலீடுகள் மட்டுமல்ல உள்நாட்டு முதலீடுகளும்கூட வெளியேறு கின்றன. (இவ்வாறு வெளிநாட்டு - உள்நாட்டு முதலீட்டு சுகவாசிகள் ஒருங்கிணைந்து செயல்படுவது என்பது பன்னாட்டு நிதி மூலதனத்தின் ஒரு முக்கியக் கூறாகும்). செல்வப் பரிமாற்றத்துக்கான அடிப்படை ஊடகமாக இருக்கும் (தங்கத்தின் மதிப்பு போன்ற) பணம் எந்த நாட்டைச் சேர்ந்ததாக இருக்கிறதோ அந்த முன்னணி முதலாளித்துவ நாட்டின் அரசு மட்டும் இதற்கு விதிவிலக்காகும். மூலதன வெளியேற்றத்திற்கு அந்த அரசு பெருமளவுக்கு

இலக்காகாது. ஆகவே, மற்ற முதலாளித்துவ அரசுகள் அனைத்தும் தமது செலவினங்களைக் குறைத்தாக வேண்டியதாகிறது. எந்தெந்த செலவினங்களைக் குறைக்கலாம் என பன்னாட்டு நிதி மூலதனம் ஆலோசனை கூறும். அரசுச் செலவினங்கள் குறைக்கப்படுவதன் மறுபக்கம்தான் முதலீட்டிற்கான வரிச்சலுகைகளும், நிதிப் பற்றாக் குறைக்கு வரம்புகள் கட்டப்படுவதுமாகும். (சமநிலை பட்ஜெட் என்பதாகச் சொல்லி மக்களுக்கான சலுகைகளில் கைவைக்கும் நடவடிக்கைக்கு ஒரு நவீனப் பெயர்தான் 'நிதிப் பற்றாக்குறை வரம்பு' என்பதாகும்).

இத்தகைய நிலைமைகளில், கிட்டத்தட்ட முழுமையான வேலைவாய்ப்பு என்ற நிலையை ஏற்படுத்துவதற்கான 'தேவை நிர்வாகம்' எனும் கெய்னீசிய கோட்பாடு சாத்தியமேயில்லை என்பது வெளிப்படை. முன்னணியில் இல்லாத நாடுகளில் அரசுச் செலவினங்கள் வற்றுவதால் அந்த நாடுகளில் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த முதலாளித்துவ உலகத்திலேயே செயல்பாடுகளும் வேலைவாய்ப்புகளும் குறைகின்றன. ஏனென்றால், நிதிப் பற்றாக் குறையைக் கட்டுப்படுத்துவதிலும் அரசுச் செலவுகளை அதிகரிப் பதிலும் மிகுந்த சுதந்திரத்தோடு செயல்படக்கூடிய ஒரு முன்னணி அரசானது, ஒரு குறிப்பிட்ட நாட்டின் அரசாகத்தான் இருக்கிறதே யன்றி உலக முதலாளித்துவ அரசாக இல்லை. ஆகவே அது தனக்கே அதிகக் கடன்களை இழுத்துப் போட்டுக்கொள்வதன் மூலமாகக் கிட்டத்தட்ட முழுமையான வேலைவாய்ப்பு என்ற நிலையை நோக்கி உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தைத் தூண்டுவதில் அக்கறை கொள்வதில்லை. 'ஓஇசிடி' (பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாடு அமைப்பு) நாடுகள் அனைத்தும் கடந்த இருபது ஆண்டுகளாக, அல்லது அதற்கும் மேலாக, மிக அதிகமான வேலையின்மையையும் மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சியை யும்தான் கண்டு வந்துள்ளன. வளர்ச்சி வேகத்தை ஆரம்பத்தில் மட்டுப்படுத்திய ("ஸ்டேக்ஃபிளேஷன்" அதாவது "தேக்க நிலை வீக்கம்" என்று வர்ணிக்கப்பட்ட) அதிகமான பணவீக்க காலகட்டம் முடிவுக்கு வந்த பிறகும்கூட அந்த நாடுகளில் இவ்வாறு ஏற்பட்டது என்பதில் வியப்பில்லை.

முதலாம் உலக யுத்தத்துக்கு முந்தைய ஆண்டுகளில் நிகழ்ந்த மூலதனக் குவிப்பு நிதி மூலதனத்திற்கு வழிவகுத்தது, யுத்தங்களுக்கும் பொருளாதார மந்த நிலைக்கும் இட்டுச் சென்றது என்றார் லெனின். மூலதனக் குவிப்பு மேலும் தொடரத் தொடர அது பன்னாட்டு நிதி மூலதனம் என்ற புதிய வடிவம் உருவாவதற்கு இட்டுச் சென்றது. இது லெனின் எழுதியதற்கு மாறுபட்டதாகும். இந்த பன்னாட்டு நிதி மூலதனம் மறுபடியும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்கு

பொருளாதாரத் தேக்க நிலையையும் வேலையின்மையையும் கொண்டுவந்திருக்கிறது; புதிய (ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே அல்லாத) யுத்தங்கள் குறித்து அச்சுறுத்துகிறது. இந்த ஒட்டுமொத்த நிகழ்ச்சிப் போக்கும் ஒன்றைத் திட்டவட்டமாக நிரூபிக்கிறது: முதலாளித்துவத்தின் கீழ் பல்வேறு தனித்தன்மை வாய்ந்த சூழல்களால் ஏற்படும் "பொற்காலங்கள்" எனப்படும் நிலைமைகள் நிலையானவை அல்ல, சொற்பக் காலத்தில் தோன்றி மறையக்கூடியவையே; முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த போக்குகள் பின்னுக்குத் திருப்பக்கூடியவையோ, நிரந்தரமாகத் தடுத்து நிறுத்தக்கூடியவையோ அல்ல - மாறாக அவை தம்மை இறுதியில் உணர்த்திவிடுகின்றன.

சோவியத் யூனியன் தகர்வதற்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிப் போக்குகளும்கூட, முரணாகத் தெரிந்தாலும், மார்க்சிய மதிப்பீடு மிகச் சரியானது என்பதையே காட்டுகின்றன. பன்னாட்டு நிதி மூலதனம் உருவெடுத்தது சோவியத் யூனியன் தகர்ந்ததில் ஒரு முக்கியக் காரணியாகும். ஏனெனில், ஒரு குறிப்பிட்ட காலத்தில், "சோசலிச" நிறுவனங்கள்கூட தங்களது பெரும் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு தங்களது நிதிகளை சோவியத் யூனியனுக்கு வெளியே கொண்டுசென்றன. இதனால் அதன் பொருளாதார இடர்ப்பாடுகள் கூர்மையடைந்தன. ஒரே நாடாக உருவாகியிருந்த சோவியத் யூனியன் தகர்ந்துவிட்டால் அதன்பின் பெருமளவுக்கு செல்வவளம் குவியும், 'ஜனநாயகம்' தழைக்கும் என்றெல்லாம் கூறித்தான் சோவியத் எதிர்ப்பு கிளப்பிவிடப்பட்டது. அவ்வாறு கூறப்பட்டதன் பின்னணியில் இருந்த உண்மை நோக்கங்கள் புரிந்துகொள்ளப்படவில்லை. ஆனால் என்ன நேர்ந்தது என்றால், பெருமளவுக்கு தொடக்க நிலை மூலதனக் குவிப்பு, சட்டவிரோத ஆட்சி ஆகிய இரண்டும் சேர்ந்து உருவாகின. உற்பத்தியில் ஒரு செங்குத்தான வீழ்ச்சி ஏற்பட்டது; அதிலிருந்து இப்போதுதான் ரஷ்யா மீளத் துவங்கியிருக்கிறது. மக்களது நடவடிக்கையின் நோக்கங்களுக்கும் உண்மையான விளைவுகளுக்கும் இடையே வேறுபாடு இருக்க முடியும் என மார்க்ஸ் கூறியிருக்கிறார். அதற்கு ரஷ்யாவில் நடந்ததைவிடச் சரியான எடுத்துக்காட்டு வேறெதுவும் இருக்க முடியாது.

இதைப் பற்றி மேலும் சிறிது பார்க்கலாம். பிரெஞ்சுப் புரட்சியின் முற்போக்கான தன்மைக்கு, புரட்சி நடந்த பதினோராவது மாதத்தில் முடிவுகட்டப்பட்டது. எனினும், அந்தப் புரட்சியின் சில சாதனைகள் தக்க வைத்துக்கொள்ளப்பட்டன. ஆனால், சோவியத் யூனியன் தகர்க்கப்பட்டதில் கவனத்துக்குரியது என்னவெனில், போல்ஷ்விக் (ரஷ்ய பொதுவுடைமை இயக்க)

புரட்சியின் மாண்புகள் கிட்டத்தட்ட முற்றிலுமாகக் கைவிடப்பட்டன (செஞ்சதுக்கத்தில் லெனின் நினைவிடம் மட்டுமே விட்டுவைக்கப்பட்டது - அதுவும்கூட நிர்ப்பந்தத்தின் காரணமாகத்தான்). இந்த உண்மையும் கூட, முதல் பார்வையில் ஊக்கமிழக்கச் செய்வதாக இருந்தாலும், ஒரு மார்க்சிய நிலைபாட்டை (முரண்பட்ட முறையில்) உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது: முதலாளித்துவத்துக்கும் உற்பத்திக் கருவிகளின் (வழிமுறைகளின்) சமுதாய உடைமைக்கும் இடையே வேறு வகையான உற்பத்தி எதுவும் இருக்க முடியாது; அரை-குறை ஏற்பாடுகள் இருக்க முடியாது; இணக்கத்திற்கு இடமற்ற பகைமைதான் இருக்க முடியும். அன்றைய கெய்னீசிய கோட்பாட்டின் மற்றொரு வெளிப்பாடுதான் இந்தப் பகைமை. 'முதலீட்டில் சமூகமயம்' என்பதை கெய்ன்ஸ் முன்வைத்தார். ஆனால் உற்பத்தி சமூகமய மாகாமல் முதலீட்டை சமூகமயமாக்குதல் என்பது சாத்தியமற்றது.

# 3. நவீன தாராளவாதமும் மூன்றாம் உலகமும்

இதுவரையில், பன்னாட்டு நிதி மூலதனத்தின் தலைமையில் ஒரு கூட்டணியாக உள்ள சக்திகளால் திணிக்கப்படும் நவீன தாராளவாதக் கொள்கைகள் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் ஏற்படுத்துகிற தாக்கத்தைப் பற்றி விவாதித்தோம். அந்தத் தாக்கம் மிகப்பெரிய அளவிலான வேலையின்மையாகவும் தேக்க நிலையாக வும் வெளிப்படுவதைப் பார்த்தோம். இப்போது, மூன்றாம் உலக நாடுகளில் நவீன தாராளவாதம் ஏற்படுத்தும் தாக்கம் குறித்துப் பரிசீலிப்போம்.

இங்கு, மூன்று அம்சங்களை மனதில் கொள்ள வேண்டும். முதலாவது அம்சம், அரசுச் செலவினங்கள் வற்றிப் போவதாகும். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளைப் போல இந்த நாடுகளிலும் இதுவே நவீன தாராளவாதத்தின் தலையாய முத்திரையாகும். இந்த நாடுகளின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தில் இது ஒரு சுருங்கிப் போகிற விளைவை ஏற்படுத்துகிறது; ஆனால், கிராமப்புற பொருளாதாரத்தில்தான் இதன் தாக்கம் மிகக் கடுமையானதாக இருக்கிறது. கிராமப்புறங்களுக்கான அரசுச் செலவினங்கள்தான் மிக மோசமாக வெட்டப்படுகின்றன. இவ்வாறு செலவுகள் வெட்டப்படுவது நேரடியாகவும் மறைமுகமாகவும் (கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியைக் குறைத்துவிடுவதன் வாயிலாக) கிராமப்புற வேலைவாய்ப்பு அளவைக் குறைக்கிறது. மேலும் கிராமப்புற உள்கட்டுமானம், அடிப்படை சமூக வசதிகள் ஆகியவற் றிற்கான செலவுகள்தான் முக்கியமாகக் குறைக்கப்படுகின்றன என்பதால், அதன் நேரடி விளைவாக மக்களின் நலவாழ்வு சுருங்கு கிறது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் கடந்த பத்தாண்டு காலத் தில் கிராமப்புற வறுமை மிக மோசமான அளவுக்கு அதிகரித்திருக் கிறது. அதிகாரப்பூர்வ தகவல்கள் இதற்கு நேர்மாறான சித்திரத்தைத் தருகின்றன என்றபோதிலும் கிராமப்புற வறுமை மோசமாகி யிருக்கிறது என்பதே உண்மை. அத்துடன் இணைந்ததாக, அரசுச்

செலவுகள் வற்றிப்போனதால், மற்ற பாதிப்புகளுக்கிடையே, கிராமப்புற வேலையின்மையும் கடுமையாக அதிகரித்துள்ளது. வறுமையும் வேலையின்மையும் வளர்ந்துகொண்டிருந்த நிலையில், அரசுச் செலவுகள் வற்றியதன் காரணமாகவே, பயன்படுத்தப்படாத தொழில் திறன் என்பதும் பரவலாகியது. விற்பனையாகாத உணவு தானிய இருப்புகள் பெருமளவுக்குக் குவிந்தன. அவற்றைப் பன்னாட்டுச் சந்தையில் தள்ளிவிட்டு பின்னர் எளிதாகக் கொள்முதல் செய்துகொள்ளலாம் என அரசாங்கம் முடிவெடுத்தது - அதுவரையில் உணவு தானியக் குவியல் தொடர்ந்தது.

இத்தகைய செலவுச் சுருக்கம் தேக்க நிலைக்கு மூலகாரண மாகியது. ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நவீன தாராளவாதக் கொள்கைகளால் இதுதான் நேர்ந்தது. நவீன தாராளவாதத்தின் கீழ் பொருளாதார வளர்ச்சிக்கான தூண்டுதல் வெளிச்சந்தையிலிருந்துதான் வர முடியும். அரசுச் செலவுகள் பரவலாக வற்றிப்போவதால் மந்தமான உலகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் சூழலில், மூன்றாம் உலக நாடுகளின் பொருளா தார சராசரி வளர்ச்சி வீதமும் குறையத்தான் செய்யும். உள்நாட்டு உற்பத்தியாளர்களது இழப்பில் மூன்றாம் உலக நாடுகளுக்கு முதலாம் உலக நாடுகளின் (பணக்கார முதலாளித்துவ நாடுகள்) பொருளாதாரச் சந்தைகளுக்குள் ஊடுருவக்கூடிய அளவுக்குப் போதிய சுதந்திரம் இருந்தால் மட்டுமே அவற்றின் வளர்ச்சி விகிதம் குறைவதைத் தடுக்க முடியும். ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள்தான் இந்த ஊடுருவல் நடக்க முடியும். எனவே, மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சி வீதம் மட்டுப்படுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது. *எனினும் வளர்ச்சி வீதத்தில் வெளிப்படையாக கூடுதல் வெற்றி பெற்றுள்ள நாடுகளில்கூட வேலையின்மையும் வறுமையும் அதிகரித்தன என்பது குறிப்பிடத்தக்கது.* இதில் சீனாவைப் பற்றி உறுதிபடக் கூற இயலவில்லை; ஆனால் இந்தியாவில் இப்படித்தான் நடந்தது எனக் கூடுதல் உறுதியுடன் சொல்ல இயலும். பொருளா தாரத்துறையில் கட்டுப்படுத்துவதாக அரசாங்கக் கொள்கைகள் இருந்த காலகட்டத்தில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீத அளவு 3.5 முதல் 4 சதவீதம் வரையில்தான் இருந்தது. ஆனால் அப்போது வேலைவாய்ப்பு வளர்ச்சி வீதம் இன்றைய நிலைமையை விட அதிகமாக இருந்தது. இன்று இந்தியா 6 சதவீதத்திற்கும் அதிகமான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. (ஆனால் வேலை வாய்ப்பு வளர்ச்சி வீதம் இன்று மிகக் குறைவு) வேறு சொற்களில் சொல்வதானால், மூன்றாம் உலக நாடுகளின் தனித்தன்மையாக அதிகரித்து வரும் வேலையின்மை என்பது, பொருளாதாரத் தேக்க நிலை உள்ள நாடுகளில் மட்டுமல்லாமல், வெளிப்படையான

செயல்விசை கொண்ட (இந்தியா போன்ற) நாடுகளிலும்கூட இருக்கிறது.

செயல்விசை உள்ள மூன்றாம் உலக நாடுகளிலும் வேலையின்மை வளர்வது குறித்து விளக்க வேண்டியுள்ளது. அந்த விளக்கம், இரண்டாவது அம்சத்திற்கு நம்மைக் கொண்டு வருகிறது. நவீன தாராளவாதம் நடைமுறைப்படுத்தப்படும் நாட்டில் உலகச் சந்தைக்கான ஏற்றுமதிகளின் வளர்ச்சியை சார்ந்திருக்கிற அந் நாட்டுப் பொருளாதார வளர்ச்சி வீதம் உயர்வதிலோ வீழ்வதிலோ எவ்வித கட்டுப்பாடும் இருக்காதென்றால், அந்நாட்டின் தொழிலாளர் உற்பத்தித் திறனின் வளர்ச்சி வீதம் மீது அதைவிட மோசமாக அறவே கட்டுப்பாடு இருப்பதில்லை. போட்டியில் தாக்குப் பிடிக்க விரும்பும் ஒரு நாடு, முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் ஏற்றுமதிகளுக்கு உதவும் வகையில் செய்யப்படுகிற கண்டுபிடிப்புகளை எல்லாம் அப்படியே நகலெடுக்க வேண்டியதாகிறது; அந்தக் கண்டுபிடிப்புகளின் தனித்தன்மையே தொழிலாளர்களை அப்புறப் படுத்துவதுதான். தொழில்நுட்ப மாற்றங்களுக்கும் கட்டமைப்பு மாற்றங்களுக்கும் இருந்து வந்த கட்டுப்பாடுகள் விலக்கிக்கொள்ளப் பட்ட நிலையில், உள்நாட்டுப் பணக்காரர்கள் ("புதிதாக வந்துள்ள நல்லதுகளை" கைவசப்படுத்திக்கொள்வதற்காக என) நவீன நகர வாழ்க்கை முறைகளை நகலெடுக்க விரும்புகிறார்கள்; அதற்காக வேகமான கட்டமைப்பு/தொழில்நுட்ப மாற்றங்களைச் செயல் படுத்துகிறார்கள். ஏற்றுமதிகளோடு தொடர்பே இல்லாத துறைகளிலும்கூட (எடுத்துக்காட்டாக சில்லறை வர்த்தகம்) அந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்துகிறார்கள். ஆகவே, நவீன தாராளவாதக் கொள்கையைக் கடைப்பிடிக்கிற மூன்றாம் உலக நாடுகள் தொழிலாளர் உற்பத்தித் திறனின் வேகமான வளர்ச்சியைக் காண்கின்றன. அதற்கேற்ப, இந்தியாவைப் போல் அதிகமான மொத்த உள்நாட்டு உற்பத்தி உள்ளபோதிலும்கூட, அந்நாடுகளில் வேலையின்மை வீதம் எகிறுகிறது.

இது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும். மூன்றாம் உலக நாடுகள் ஏற்கெனவே உழைக்கத் தயாராக உள்ள தொழிலாளர்களை மிகப்பெரும் அளவுக்கு இருப்பில் வைத்துள்ளன. அதனால்தான் கூலி விகிதம், வேலையில் உள்ள தொழிலாளர்களை உயிரோடு வைத்திருக்கக்கூடிய அளவில் இருக்கிறது. இந்நிலையில், தொழிலாளர்களது வளர்ச்சி வீதத்துக்குக் குறைவாக, தொழிலாளர்களுக்கான தேவையின் வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடையுமானால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும், தொழிலாளர்கள் முற்றிலும் கதியற்றவர்களாக்கப்படுகிறார்கள். ஏனெனில், கூலி வீதம் அதிகரிக்

காத நிலையில், ஒவ்வொரு தொழிலாளிக்குமான வேலை அளவு குறைகிறது. ஆனால் அதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உபரியின் (அதாவது ஒட்டுமொத்த உற்பத்திச் செலவை விடக் கூடுதலாக வரும் வருவாயின்) பங்கு செங்குத்தாக உயர்கிறது. "உற்பத்தியில் ஈடுபடாத தொழிலாளர்கள்" படையின் அளவும், அதற்கான சன்மானமும் அதிகரிக்காமல் மட்டும் போயிருக்குமானால், இந்த உபரி குவிவதால் ஏற்படும் பிரச்சனை கடுமையான எல்லைகளைத் தொட்டிருக்கும். வேலையில் இல்லாத தொழிலாளர்களை "உற்பத்திப் பயனற்ற தொழிலாளர்கள்" என்று ஆடம் ஸ்மித் குறிப்பிடுகிறார். முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் நிதிமூலதனத்தால் மற்றவர்களைச் சார்ந்து வாழ வேண்டியவர்களாக வைக்கப்பட்டிருப்பவர்கள் இவர்கள். வேடிக்கை என்னவெனில், இப்படி வைக்கப்பட்டிருப்பவர்களின் வருமானமும்கூட மொத்த உள்நாட்டு உற்பத்தியோடு சேர்த்துக் கணக்கிடப்பட்டு "அதிக வளர்ச்சி" என்று குறிப்பிடப்படுகிறது! "அதிக வளர்ச்சி" உள்ள நாடுகளில் சமத்துவமின்மைகள் பெருமளவுக்கு அதிகரிப்பதில் வியப்பதற்கொன்றுமில்லை.

நவீன தாராளவாதக் கொற்றத்தோடு இணைந்த மூன்றாவது அம்சம் விவசாய அவலம். முதலாளித்துவ உலகப் பொருளாதாரத்தில் ஏற்படும் தேக்க நிலை அடிப்படை உற்பத்தியாளர்களின் வர்த்தக நிலைமைகளை மோசமாக்குகிறது. மூன்றாம் உலக நாடுகளின் அடிப்படை உற்பத்தியாளர்களுக்கு, அரசாங்கக் கட்டுப்பாடுகள் இருந்த காலகட்டத்தில், சரக்குகளின் உலகளாவிய ஏற்ற இறக்கங்களிலிருந்து ஒரு பாதுகாப்பு கிடைத்து வந்தது. இப்போது அந்த நாடுகள் சுதந்திர வர்த்தகம், சுதந்திரச் சந்தை ஆகியவற்றை நோக்கி நகர நகர மோசமான வர்த்தக நிலைமைகளின் பலியாடுகளாகிறார்கள். அரசின் செலவுக் குறைப்பு நடவடிக்கைகளால் மானியங்கள் வெட்டப்படுவது, அதே நேரத்தில், இத்தகைய உற்பத்தியாளர்களின் பல்வேறு இடுபொருள் செலவுகளை அதிகரித்துவிடுகிறது. வர்த்தக நிலைமைகளின் சரிவு (இவர்களது உற்பத்திப் பொருள்கள் சந்தைச் சரக்காகச் செல்கிறபோது கிடைக்கும் விலைகளும்கூட குறைகின்றன) ஒரு பக்கம், உற்பத்திச் செலவுகள் அதிகரிப்பு இன்னொரு பக்கம். இந்த இரண்டுக்கும் இடையே, சிறு உற்பத்தியாளர்கள் - குறிப்பாக விவசாயிகள் - கடும் அவல நிலையை அனுபவிக்க வேண்டியவர்களாகிறார்கள். அதே செலவுக்குறைப்பு நடவடிக்கைகளால், அரசின் பொது சேவைகள் கிடைத்து வந்ததும் கிராமப்புற உள்கட்டுமான வசதிகளும் குறைகின்றன, இதனால் அந்த அவல நிலை மேலும் அதிகரிக்கின்றன.

காலனியாதிக்கத்துக்குப் பின் உருவான காலகட்டத்தில் இது ஒரு புதிய நிலைமைதான். எனினும் விவசாய அவல நிலை இப்படிக் கூர்மையாக அதிகரித்திருப்பது, இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன் நிலவிய போக்கு தொடர்வதையே காட்டுகிறது. உண்மையில், சிறு உற்பத்தியாளர்கள் தட்டிப் பறிக்கப்படுவது, அவர்கள் வெளியேற் றப்படுவது ஆகியவை முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத போக்காகும். "பொற்காலம்" என்பதாகச் சொல்லப்பட்ட காலகட் டத்தில் (உலக அளவில்) இந்தப் போக்கு சிறிது காலம் கட்டுப்படுத் தப்பட்டிருந்தது; எனினும் பின்னர் இந்தப் போக்கு இறுதியாகத் தன்னை முழு ஆற்றலுடன் நிலைநாட்டிக்கொண்டு விட்டது.

# 4. ஏகாதிபத்தியமும் யுத்தமும்

அரசாங்கக் கட்டுப்பாடுகள் விலக்கிக்கொள்ளப்படுவது; மூன்றாம் உலக நாடுகள் உலக நிதியின் ஓட்டத்துக்குத் திறந்து விடப்பட்டதைத் தொடர்ந்து அதன் உள்ளார்ந்த விளைவாக அந்த நாடுகள் நலிவடைவது; யுத்தத்துக்குப் பிந்தைய சூழலில் தற்காலிக மாக சிறிது கட்டுப்படுத்தப்பட்டிருந்த முதலாளித்துவ உள்ளார்ந்த போக்குகள் அனைத்தும் கட்டவிழ்க்கப்படுவது; மூன்றாம் உலக நாடுகளுக்குள் தயாரிப்புத் துறைகளில் மட்டுமல்லாமல் கனிம வளங்களிலும்கூட பணக்கார நாடுகளின் முதலீடுகளுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கப்படுவது; மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்க நிர்வாகத்தைக் கண்காணிக்கும் வேலையை (உலக வங்கி, பன்னாட்டு நிதியம் போன்ற) 'பிரெட்டன் உட்ஸ்' நிறுவனங்கள் தங்கள் கையில் எடுத்துக்கொள்வது; "சுதந்திரச் சந்தையின் செயல்திறன்", "முழு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் ஊதிய நெகிழ்வுத்தன்மை" ஆகியவை போன்ற, பன்னாட்டு நிதி மூலதனத்தால் ஊட்டப்படுகிற கருத்துக்களின் மூலம் ஏற்படுத்திக்கொள்ளப்படுகிற அறிவுத்தள நன்மதிப்பு - ஆகிய இவை அனைத்தும் பழைய காலனியாதிக்க உறவு நிலையைப் புதிய சூழலில் உருவாக்க முயலும் ஒரு புதிய, வம்படியான ஏகாதிபத்திய காலகட்டத்தை இனங்காட்டுவதாக உள்ளன.

எனினும், இந்த நடைமுறைப் போக்கு ஒரு யுத்தக் காலகட்டத்திற்குள் வந்துள்ளது. இந்த யுத்தங்கள் "பொதுவான" ஏகாதிபத்திய வேட்டையின் ஒரு பகுதி மட்டுமேயல்ல; ஒரு குறிப்பிட்ட முரண்பாட்டை அவை பிரதிபலிக்கின்றன. முதலாளித் துவ உலகத்தின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்காக மூன்றாம் உலக நாடுகளைக் கசக்கிப் பிழிகிற நீண்ட வரலாறு ஒரு புதிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது; அந்த உத்தியின் செயல்திறன் கூர்மழுங்கி விட்டது. மூன்றாம் உலக நாடுகளின் வர்த்தக நிலைமைகள் வீழ்ச்சியடைந்து வந்ததன் காரணமாக, முன்னேறிய நாடுகளின் மொத்த உற்பத்தி மதிப்பில் அடிப்படைச் சரக்குகளின் பங்கு சிறிதாகிவிட்டது. (முன்னேறிய நாடுகளில்

"மதிப்பைக் கூட்டுவதற்காக" அவற்றின் ஆற்றல் புதிரான முறையில் அதிகரித்துள்ளது என கூறப்படுகிறது - அது காரணமல்ல). எனவே அடிப்படை உற்பத்தியாளர்களாகிய மூன்றாம் உலக நாடுகளைக் கசக்கிப் பிழிவதன் மூலம் முன்னேறிய நாடுகளின் பணவீக்க நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்பதற்கான வாய்ப்பு பெருமளவுக்குச் சுருங்கிவிட்டது. ஆனால், முதலாளித்துவ உலகின் விலை முறையை நிலைகுலையச் செய்யும் ஆற்றல் உள்ள ஒரு சரக்கு இருக்கிறது; அந்தச் சரக்கின் மீதான கட்டுப்பாட்டைக் கைப்பற்ற முடியுமானால் விலை முறையை நிலைப்படுத்திக் கொள்ள முடியும். அந்தச் சரக்குதான் பெட்ரோலிய எண்ணெய். உலக நாடுகளின் பணங்களுக்குத் தலைமை தாங்குகிற பணத்தின் மதிப்பு முன்போல தங்கத்தோடு தொடர்புடையதாக இல்லை. "தங்கத்தைப் போல மதிப்பு மிக்கது" என்று சொல்லப்படும் அதன் தன்மையைத் தக்கவைத்துக்கொள்வதென்றால், அதனை எண்ணெ யோடு தொடர்புபடுத்தினால்தான் முடியும். அதாவது, தலைமைப் பணமாகிய அமெரிக்க டாலரைப் பொறுத்தவரையில், எண்ணெய் விலை உயர்ந்துகொண்டே போகாது என்ற நம்பிக்கை செல்வ உடைமையாளர்களின் மனங்களில் ஏற்பட்டால்தான் முன்னேறிய நாடுகளின் விலை முறையை நிலையாக வைத்திருக்க முடியும். சுருக்கமாகச் சொல்வதென்றால், பிரெட்டன் உட்ஸ் உடன்படிக் கைக்குப் பிந்தைய காலகட்டத்தில், நாடுகளின் பணங்கள் "மிதந்து கொண்டிருக்க வேண்டும்" என்று எதிர்பார்க்கப்பட்டாலும், முதலாளித்துவ நாடுகள் "எண்ணெய் - டாலர் வரையளவு" என்பதன் மீதுதான் மிதந்து கொண்டிருக்கின்றன.

அமெரிக்க டாலர் மதிப்பு மீது செல்வ உடைமையாளர் களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விடுமானால் முதலாளித்துவ உலகத்தின் பொருளாதாரம் மிகப்பெரிய அளவுக்கு நிதிக் குழப்பத்தைச் சந்திக்க நேரிடும். அதிலும், குறிப்பாக அமெரிக்கா வின் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை நீடித்துக் கொண்டிருக்கிற நிலையில் டாலர் மதிப்பு மீது நம்பிக்கை போய்விடுவது பெருங் குழப்பத்துக்கு இட்டுச் செல்லும். எனவே, அந்த நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொள்வதற்காக, எண்ணெய் வளங்களைக் கட்டுப் படுத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் அமெரிக்காவுக்கு ஏற்பட் டுள்ளது. அவ்வாறு எண்ணெய் வளங்களைக் கட்டுப்படுத்துவது என்பதை, எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் யுத்தம் நடத்தாமலும், எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் யுத்தம் நடத்தியும் செய்கிறது அமெரிக்கா. சுருக்கமாக, முதலாளித் துவ உலகின் நிலையான நிதி நிலைமைக்கு அச்சுறுத்தல் ஏற்பட் டுள்ள நிலையில், அந்த நிலையான தன்மையை அப்படியே பராமரிக்க வேண்டிய தேவையில் இருந்து வருவதுதான் யுத்தம்.

எனினும், இதில் ஒரு முரண் இருக்கிறது. நிலையான நிதி நிலைமைக்காக அமெரிக்கா, எண்ணெய் வளம் மிக்க ஈராக் மீது தாக்குதல் தொடுத்தது. ஆனால், அந்தத் தாக்குதலின் காரணமாகவே வேறொரு நிலைமை ஏற்பட்டது; அந்தத் தாக்குதலால் அமெரிக்காவுக்கே எழுந்த எதிர்ப்பின் மூலமாக அந்த நிலைமை ஏற்பட்டது. அது என்னவெனில், எண்ணெய் விலை மேலும் அதிகமாக உயர்ந்தது. இதனால் நிலையான நிதி நிலைமைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மேலும் கடுமையாகியது. ஈரான் போன்ற, எண்ணெய் வளம் மிக்க மற்ற நாடுகள் மீது போர் தொடுத்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் அதிகரித்தது. ஒருவேளை ஈரான் மீது அமெரிக்கா போர் தொடுக்குமானால், இதே முரண்நிலையைத்தான், இதைவிடக் கூர்மையாக, அமெரிக்கா சந்திக்கும்.

# 5. எதிர்ப்பும் மாற்றமும்

யுத்தம் என்பதே, மிகவும் பொதுவான ஒரு அம்சத்தின் வெளிப்பாடாகக் கண்ணுக்குப் புலப்படுகிற வடிவம்தான். ஆக்கிர மிப்பு மூலம் செல்வம் திரட்டுதல் என்பதே அந்தப் பொதுவான அம்சம். அதுவே முதலாளித்துவத்தின் இயல்புமாகும். சிறு உற்பத்தியாளர்கள் தட்டிப்பறிக்கப்படுவது, பொதுவான உடைமை வளங்கள் கைப்பற்றப்படுவது, சிறு முதலாளிகள் அப்புறப்படுத்தப் படுவது, (அண்மைக்காலமாக) அரசுச் சொத்துக்கள் (மலிவு விலையில் தனியார் மயமாக்குகிற நடைமுறை மூலமாக) கையகப் படுத்தப்படுவது ஆகியவை அந்தப் பொதுவான அம்சத்திற்கு சரியான எடுத்துக்காட்டுகளாகும். ஆக்கிரமிப்பு மூலம் திரட்டுதல் (சொத்துக் குவிப்பு) என்பதன் ஒரு பகுதி, "மூலதனத்தை மையப் படுத்துவதாகும்." முதலாளித்துவ முறைக்குள்ளேயே அதன் "இயல் பான" செயல்பாட்டின் மூலமாக இது நடைபெறுகிறது. அதன் மற்றொரு பகுதி, முதலாளித்துவ வட்டாரத்துக்கு வெளியேயிருந்து உற்பத்திக் கருவிகளைக் கைப்பற்றுவதாகும். "தொடக்கநிலை மூலதனக் குவிப்பு" என்று மார்க்ஸ் குறிப்பிடுகிற நடைமுறை இதில் உள்ளது. மையக்குவிப்பு, தொடக்க நிலைக் குவிப்பு ஆகிய இரண் டும் ஆக்கிரமிப்பு மூலம் திரட்டுவதன் இரண்டு வடிவங்களாகும்; இவற்றில் முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த போக்குகள் அடங்கி யுள்ளன. ஆக்கிரமிப்பு மூலம் செல்வம் திரட்டுவதற்கான ஒரு கருவிதான் யுத்தம்; மற்ற வழிகளில் பலவந்தப்படுத்துவது தோல்வி யடைகிறபோது இந்தக் கருவி பயன்படுத்தப்படுகிறது.

நவீன தாராளவாதத்தின் தனி முத்திரையான ஆக்கிரமிப்பு மூலம் திரட்டுகிற நடைமுறை, மூன்றாம் உலக நாடுகளில் வேலை யின்மை, வறுமை, கிராமப்புறத் துயரங்கள் ஆகியவற்றை அதிகரிக் கிறது. இந்த அவலநிலை, யுத்தம் என ஒன்று நடக்காமலே கூட ஏற்படுகிறது; யுத்தத்தால் ஏற்படும் அவலம் கூடுதலாக இதனுடன் சேர்ந்துகொள்கிறது. கூர்மையான கிராமப்புற வறுமை என்பது, மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவதோடு ஒத்துப் போக முடியாதது. எனவே, நவீன தாராளவாதத்தில் மக்களின் ஜனநாயக உரிமைகளைச் சுருங்க வைப்பது என்பது கட்டாயமாக உள்ளடங்கி யிருக்கிறது. மக்களின் அரசியல் அதிகாரத்தைப் பறிக்கிற

நடைமுறையாகும் இது. வேடிக்கை என்னவெனில், இவையனைத்தும் "முன்னேற்றம்" என்பதை மேம்படுத்துவது என்ற பெயராலேயே செய்யப்படும். "முன்னேற்றத்தின்" பெயரால் மக்கள் அவர்களது வாழ்விடங்களிலிருந்து வீசியெறியப்படுகிறார்கள், அவர்களது நிலங்கள் (வழக்கமாக ஒரு சொற்பத் தொகையை இழப்பீடாகக் கொடுத்துவிட்டு) கைப்பற்றப்படுகின்றன. "முன்னேற்றத்தின்" பெயரால், வேலையின்மையையும் பொது சேவைகள் மாயமாவதையும் உள்ளடக்கியதாக அரசுச் செலவுகள் வற்றிப்போகச் செய்யப்படுகின்றன. ஒரு பக்கம் "ஜனநாயகம்" நிலைநாட்டப்படுகிறது என்ற பெயரில் யுத்தங்கள் தொடுக்கப்படுகின்றன; அதே நேரத்தில் "முன்னேற்றம்" என்ற பெயரில் ஜனநாயகம் சுருக்கப்படுகிறது.

பன்னாட்டு நிதி மூலதன ஆதிக்கம் என்ற இன்றைய வஞ்சகச் சூழலில் முதலாளித்துவத்தின் கொடூரத்தன்மை, பயங்கரவாதம் போன்ற எதிர்வினைகளைக் கிளப்பி விடுகிறது. பயங்கரவாதத்தில் ஒரு வகை எதிர்ப்புணர்வு இருக்கிறது என்றாலும், அதில் மாற்றத்திற்கு வழியில்லை. மாறாக, இப்படிப்பட்ட எதிர்வினைகள் மக்களின் துயரத்தைத்தான் பன்மடங்காக்குகின்றன. வன்முறையின் முடிவற்ற சங்கிலித் தொடரை ஏற்படுத்துகின்றன. அது பயன் விளைவிக்காதது, வீணானது மட்டுமல்ல, சோகமானதுமாகும். இந்த சோக நிலையில்தான் நாம் இன்று இருக்கிறோம்.

இந்தச் சோகத்திற்கு முடிவு கட்ட வேண்டுமானால், இன்றைய நிலையை மாற்றத்திற்கான எதிர்ப்பு நிலையாக மாற்ற வேண்டுமானால், இன்றைய நெருக்கடிச் சூழலைக் கோட்பாடு அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது. அத்தகைய புரிதலுக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பது மார்க்சியம் மட்டுமே. எந்தவிதமான முதலாளித்துவக் கருத்தாக்கமோ, மதம் சார்ந்த தீவிரவாதமோ இன்றைய நெருக்கடிச் சூழலிலிருந்து விடுபட வழிகாட்டாது. ஏனெனில், அவை இரண்டுமே மற்ற அம்சங்களுக்கிடையே முதலாளித்துவத்தின் தன்னைத்தானே இயக்கிக் கொள்ளும் திறனைக் காண மறுக்கின்றன. அவை இரண்டுமே சிந்தனைப் பூர்வமாக உடைமை அமைப்பிற்குள் சிக்கியுள்ளன. இன்றைய நெருக்கடிச் சூழலிலிருந்து உடைத்துக் கொண்டுவர வேண்டுமானால், உடைமை உறவுகளுக்கான ஒரு மாற்று அமைப்பு தேவை. அதுதான் சமூகவுடைமையாகிய சோசலிசம். இது ஏதோ தவிர்க்க முடியாத வளர்ச்சிப் போக்கு என்பதல்ல, மாறாக உருவாக்கப்பட வேண்டிய மாற்றமாகும். இன்றைய இக்கட்டிலிருந்து விடுபடுவதற்கான வழியை எப்படி உருவாக்குவது என்பதற்கான கோட்பாட்டு வெளிச்சத்தைப் பாய்ச்சக்கூடியது மார்க்சியம் மட்டுமே. இந்த உண்மையில்தான் மார்க்சியத்தின் இன்றியமையாமை பொதிந்திருக்கிறது.

❖❖❖

# II

# நவீன தாராளவாதத்தின் கீழ் அரசு

*(சென்னையில் 2006 அக்டோபர் 30 அன்று இந்திய சமூக விஞ்ஞானக் கழகம் நடத்திய வி.பி.சிந்தன் நினைவுச் சொற்பொழிவுக் கூட்டத்தில் நிகழ்த்தப்பட்ட உரை)*

நவீன தாராளவாத காலகட்டத்தில் முதலாளித்துவ அரசு என்ற பொருள் குறித்து நிறையவே எழுதப்பட்டிருக்கிறது. "நவீன தாராள அரசு" என்பதன் இரண்டு அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு அம்சம், அரசின் இயல்புத் தன்மையில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றியதாகும். சமுதாயத்தின் உச்சியில் வெளிப்படையாக நின்றுகொண்டு, ஒட்டுமொத்த சமுதாய நலன் கருதி அதன் பொருளாதாரச் செயல்பாட்டில் தலையிடுகிற ஒரு கட்டமைப்பு என்ற தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. நிதி மூலதனத்தின் தங்கு தடையற்ற நலன்களைக் கூட விட்டுக்கொடுத்து சமுதாய நலனைக் கருத்தில் கொண்டு செயல்படும் என்ற (பொருளாதார ஆய்வாளர் கெய்ன்ஸ் கூறிய 'தேவை நிர்வாகம்' என்பது கோலோச்சிய காலகட்டத்திலும்கூட அரசு சமுதாய நலன் கருதியே செயல்பட்டது போன்ற) தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இப்போது முழுக்க முழுக்க நிதி மூலதன நலன்களைப் பாதுகாத்து வளர்க்கிற கட்டமைப்பாக அரசு மாறியுள்ளது. சில நேரங்களின் இந்த மாற்றம் "அரசின் பின்வாங்கல்" என்பதாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. (சமுதாயத்திற்காக) செலவு செய்கிற, முதலீடு செய்கிற, உற்பத்தி செய்கிற பொறுப்பிலிருந்து தாவி, தனியார்மயமாக்குவதையும் அரசுப் பங்குகளை விலக்கிக் கொள்வதையும் செயல்படுத்துகிற, நிதி மூலதனத்தின் நிரந்தரக் கோரிக்கைக்கு இணங்கி அரசுச் செலவினங்களை வற்றிப்போகச் செய்கிற புதிய பொறுப்புக்கு மாறியிருப்பதில் அரசின் இயல்புத் தன்மை மாற்றம் வெளிப்படுகிறது.

இரண்டாவது அம்சம், இன்றைய காலகட்டத்தில் நிதி மூலதனம் எந்தவொரு குறிப்பிட்ட தேச ஆட்சியெல்லைக்கும்

(தனது ஏகாதிபத்திய உடன்பிறப்புக்கும்) கட்டுப்பட்டதாக இல்லை என்பது பற்றியதாகும். மாறாக, ஒரு பன்னாட்டுத் தன்மையை அது பெற்றிருக்கிறது. நிதி மூலதனம் இயங்கிக்கொண்டிருக்கிற உலகளாவிய தளத்தில் அதனைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் அதற்கொரு உலகளாவிய "பதிலி" அரசு என்பது கட்டாயத் தேவையாகிறது. அந்த உலகளாவிய அரசு என்ற பொறுப்பை, மிகவும் பலம் வாய்ந்த அரசின் தலைமையில், அதாவது அமெரிக் காவின் தலைமையில், பெரிய முதலாளித்துவ நாடுகளின் அரசுகள் நிறைவேற்றிக்கொண்டிருக்கின்றன. அதற்கு, பலமற்ற நாடுகளின் அரசுகள் ஆதரவாக உள்ளன; ஏனெனில் அந்த நாடுகளில் இருக்கக்கூடிய பெரிய முதலாளிகளும், நிதியாளர்களும் இத்தகைய ஒரு ஏற்பாட்டை ஆதரிக்கிறார்கள். "ஒற்றைத் துருவ உலகம்" என்பதாகச் சொல்லப்படுகிற, அமெரிக்காவின் தலைமைப் பாத்திரத்துக்கு அனைத்து நாடுகளின் அரசுகளும் "அனுசரித்துக் கொள்கிற அமைப்பு என்பது உண்மையில், பன்னாட்டு நிதி மூலதன நலன் களைப் பாதுகாப்பதற்காக ஒரு "பதிலி" உலக அரசு நடைமுறைக்கு வந்திருப்பதேயாகும். (ஒருவருக்கு பதிலாக வேறொருவர் பொறுப் பேற்பது, ஒரு அமைப்பின் சார்பாக வேறொரு அமைப்பு செயல் படுவது போன்ற ஏற்பாட்டையே "பதிலி அரசு" என குறிப்பிடுகிறார் பேராசிரியர் பிரபாத் பட்நாயக். - மொழிபெயர்ப்பாளர்.)

இக்கட்டுரையில் நான் இந்த இரு அம்சங்கள் குறித்தும் விளக்கப்போவதில்லை. இந்தக் கட்டுரையின் நோக்கம் முற்றிலும் மாறுபட்ட மூன்றாவது அம்சமாகிய "நவீன தாராளவாத அரசு" என்பதன் மீது கவனத்தை ஈர்ப்பதேயாகும். அரசு என்பதன் கட்டமைப்பு, அதாவது அதன் இயல்புத்தன்மை, அதிகாரவர்க்கம் மற்றும் இதர அரசுப் பொறுப்பாளர்களின் இயல்புத்தன்மை, பொதுவாக 'உயிர்ப் பொருளாக' உள்ள அறிவுத்துறையினரின் தன்மை ஆகியவற்றில் இன்றைய நவீன தாராளவாத காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த ஆய்வு இது. இந்த மாற்றத்தின் தாக்கங்கள் மிக விரிவானவை என்பது குறித்தே இங்கு விவாதிக்க விரும்புகிறேன்.

அதற்கு முன், முதலாளித்துவத்தின் ஒரு அம்சம் குறித்து சில பொதுவான கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அந்த அம்சம் குறித்து யாரும் கவனம் செலுத்தவில்லை என்பது வியப்புக்குரியது.

# 1. ஒரு அடிப்படை முரண்

காரல் மார்க்ஸ் குறிப்பிட்டதைப் போல, முதலாளித்துவம் அதற்கு முந்தைய உற்பத்தி முறைகள் அனைத்திலிருந்தும் மாறு பட்டதாகும். அதாவது, முந்தைய முறைகளைப் போல அல்லாது, முதலாளித்துவத்துவ முறையின் அடிப்படையாக உள்ள உற்பத்தி உறவுகள் வெளிப்படையாகப் புலப்படுவதில்லை. நேரடி உற்பத்தி யாளர்களிடமிருந்து உபரியை எடுத்துக்கொள்வது என்பது, நிலப்பிரபுத்துவ அமைப்பின் கீழ் நடைபெறுவது போல் "வழக்கம்" அல்லது "பாரம்பரியம்" என்ற ஏமாற்று வழிகளில் தனிமனிதர்களை உறிஞ்சுகிற வழிமுறையைப் பயன்படுத்தி நடைபெறுவதில்லை. மாறாக, வெளிப்படையாக ஒரு சரிசமமான ஏற்பாட்டில் தாமாக முன்வந்து வர்த்தகச் செயல்பாட்டில் பங்கேற்கிற சரக்கு உடைமை யாளர்களாகிய ஒரு பிரிவினரிடையே, சரிசமமான கொடுக்கல் - வாங்கல் ஏற்பாட்டின் கீழ் அது நடக்கிறது. இவ்வாறு, அப்பட்ட மான சுரண்டல் வழிமுறைகளிலிருந்து விலகி, மிக நுட்பமான, தனிமனிதர்களைச் சார்ந்திராத, நேரடியாகத் தெரியாத ஒரு சுரண்டல் வழிமுறைக்கு மாறியது என்பதில், மக்கள் சமுதாயம் தொடர்பான அரசு அமைப்பின் நிலையில் ஏற்பட்ட மாற்றமும் உள்ளடங்கியுள்ளது. சமுதாயத்தைப் பொறுத்தவரையில் ஒரு தன்னாட்சி நிலையை அரசு பெறுகிறது. ஒரு வர்க்க - அரசு என்ற நிலை தொடரவே செய்கிறது, அடிப்படையான முதலாளித்துவ உடைமை உறவுகளைப் பாதுகாப்பது தொடர்கிறது என்றபோதி லும் ஒரு சுயேச்சையான நிலையை அது பெறுகிறது. "அனைவரின் நலன்" கருதி பெருந்தன்மையோடு கண்காணிக்கிற ஒரு வெளிப் படையான பங்கினை, ஒட்டுமொத்த சமுதாயத்தின் நலன்களையும் பாதுகாக்கிற வெளிப்படையானதொரு காப்பாளர் என்ற நிலையை அது பெறுகிறது. நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில் அரசர் என்பவர் மற்ற எந்த நில உடைமையாளரையும் போன்றே அவரும் ஒரு நிலவுடைமையாளர்; ஆனால் மற்ற எல்லோரையும்விட மிகப்பெரிய நிலவுடைமையாளர். அந்த நிலையில், வெளிப்படை யாகப் புலப்படும் சுரண்டல் முறைக்கு அப்பாற்பட்ட அல்லது

அதற்கெல்லாம் மேலான அரசு அமைப்பு என்ற கருத்தாக்கம் தோன்றுவதற்கான வாய்ப்பே இல்லை. தனது சீமான்கள் சிலரது "அத்துமீறல்களை" அரசரால் கட்டுப்படுத்த முடியும் என்ற வகையில் அவரைப் பெருந்தன்மையானவராகக் கருதலாம்தான். ஆனாலும் அவர் "சாதாரணமான" நிலைகளில் அந்த சீமான்களுக்கு அப்பாற்பட்டவர் அல்ல. சுரண்டல் முறைக்கு அப்பாற்பட்ட அரசு என்பதற்கான சாத்தியப்பாடு எப்போது ஏற்படுகிறது என்றால், சுரண்டல் முறையே வெளியே புலப்படாத தன்மையைப் பெறுகிற போதுதான் நிகழ்கிறது. சுரண்டலின் கண்ணுக்குப் புலப்படாத தன்மையை முழுமையானதாக்கக்கூடிய ஒரு நடப்பு நிலையாக அந்த சாத்தியப்பாடு மாறுகிறது. வேறு சொற்களில் சொல்வதானால், *சுரண்டலின் மறைமுகத்தன்மை, சமுதாயத்திற்கான அரசுக்கும் அதே போன்ற மறைமுகத்தன்மையை ஏற்படுத்துகிறது.*

உண்மையில், சுரண்டலின் மறைமுகத்தன்மையை உடைக்க வேண்டும் என்பதைப் போலவே, அரசு அமைப்பின் மறைமுகத் தன்மையையும் கருத்துப்பூர்வமாகவும் செயல்பூர்வமாகவும் உடைக்க வேண்டும் என்பதே மார்க்சியத்தின் ஒரு மையமான அக்கறையாகும். கார்ல் மார்க்ஸ் மேற்கொண்ட தொடக்க முயற்சிகளுக்குப் பின்னர், சுரண்டல் நடைமுறையின் மறைமுகத்தன்மையை உடைப்பது என்பதைவிட அரசுக்கும் சமுதாயத்துக்கும் இடையேயான உறவில் உள்ள மறைமுகத் தன்மையை உடைப்பதிலேயே மார்க்சியம் கவனம் செலுத்தி வருகிறது என்றுகூட சொல்ல முடியும். இதற்கான காரணம் எளிமையானது. அரசின் வர்க்கத் தன்மை புரிந்து கொள்ளப்படவில்லை என்கிறபோது (அது ஒரு கடினமான பணிதான்), சுரண்டல் நடைமுறையைப் புரிந்து கொண்ட பின்னரும்கூட, ஒட்டுமொத்த அமைப்பு குறித்து அரை குறையாகத்தான் புரிந்துகொள்ளப்படுகிறது. அந்த அரைவேக்காட்டுப் புரிதல், வர்க்கச் சுரண்டல் அமைப்பை மாற்றுவதற்கான வாய்ப்பை ஆற்றலோடு தடுத்து நிறுத்துகிறது. ஒருவர் வர்க்கப் போராட்டத்தின் உண்மைத் தன்மை மீது நம்பிக்கை வைப்பது மட்டுமே ஒரு மார்க்சியவாதியாவதற்குப் போதுமானதல்ல என்றார் லெனின். வர்க்கப் போராட்டம் முதலாளித்துவ அரசை அகற்றி விட்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதாக இருக்க வேண்டும் என்று நம்புகிறவரே மார்க்சியவாதி என்றார் அவர். அரசு - சமுதாய உறவின் மறைமுகத்தன்மையை ஒழித்துக் கட்டுவதற்கு லெனின் அளித்த முக்கியத்துவத்தையே இது காட்டுகிறது.

அரசு - சமுதாய உறவைப் புரிந்துகொள்வதில் உள்ள பெரிய சவால் எங்கிருந்து வருகிறது என்றால், சுரண்டலை நேரடியாகத் தொழிலாளி வர்க்கம் அனுபவிக்கிறது; ஆனால், ஒரு வர்க்க

அரசாகவே உள்ள அரசு அமைப்புடன் தொழிலாளி வர்க்கத்துக்கு ஏற்படுகிற மோதல்கள் வரலாற்று நிகழ்வுதானேயன்றி வழக்கமானதல்ல. தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டங்களை உடைப்பதாக அரசின் அடாவடிகள் அமைகிறபோதுதான் அந்த மோதல்கள் ஏற்படுகின்றன. இது ஒரு புறமிருக்க, பாட்டாளி வர்க்கம் அரசின் வர்க்கத் தன்மை பற்றிய புரிதலை உள்வாங்கிக் கொண்டால்தான் ஒரு அரசியல் போராட்டத்தை மேற்கொள்ள முடியும். "வறுமையின் மெய்யறிவு" *(கார்ல் மார்க்ஸ், 1847)* என்ற நூலில், பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்ட நடைமுறையேகூட அதனை அரசியல் உணர்வு பெறச் செய்கிறது என்ற ஒரு கருத்து உள்ளது. எனினும் அந்த நூல் வெளியாகிய சில நாட்களுக்குப் பிறகு *(1848)* எழுதப்பட்ட "கம்யூனிஸ்ட் அறிக்கை", பாட்டாளி வர்க்கத்துக்குப் புரட்சிகர உணர்வு "வெளியிலிருந்து" வருகின்றது என்ற கருத்தை முன்வைக்கிறது. தங்களது வர்க்கத் தன்மையை மாற்றிக்கொண்டு "ஒட்டுமொத்த வரலாற்று நிகழ்வுப் போக்கை" காணக்கூடியவர்களாக உள்ள முதலாளித்துவ அறிஞர்களின் மூலமாக அந்த உணர்வு வருகிறது என்று 'கம்யூனிஸ்ட் அறிக்கை' கூறுகிறது. லெனின் எழுதிய "என்ன செய்ய வேண்டும்" என்ற நூலில் இக்கருத்து முக்கியமாக இடம்பெற்றது, "லெனினியம்" என்பதன் மையமான சிந்தனையாகவேகூட அது அமைந்தது.

அரசுக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான உறவின் இந்த மறைமுகத் தன்மையின் புறநிலை அடிப்படை, "சுயமாகச் செயல்படுகிற", "தன்னைத்தானே முறைப்படுத்துகிற" முதலாளித்துவ அமைப்பின் இயல்பில் இருப்பதாகக் கருதப்படக்கூடும். கார்ல் மார்க்ஸுக்கு முன்பே, மரபு வழிப்பட்ட அரசியல் பொருளாதாரக் கோட்பாளர்கள் அப்படித்தான் விளக்கமளித்து வந்தனர். அமைப்பின் "ஆட்ட விதிகளை" கண்காணிப்பதற்கு மட்டுமே இதில் அரசு அமைப்பு என்ற ஒன்று தேவைப்படுகிறது என்பதாகவும் புலப்படுகிறது. ஆனால் இப்படி "தானாகச் செயல்படுகிற", "தன்னைத் தான் முறைப்படுத்திக் கொள்கிற" பொருளாதார ஒழுங்கமைப்பு என்ற கருத்தாக்கமே ஒரு மாயைதான். (மாபெரும் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டது போன்ற சில நிகழ்வுகள் தவிர்த்து) முதலாளித்துவம் ஒரு பெரிய குழப்பமான பொருளாதார ஒழுங்கமைப்பாக இருந்ததில்லை என்பது உண்மையே. ஆனால் அதற்கான காரணம், முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த இயல்புத் தன்மையில் இல்லை. மாறாக, நெருக்கடிகளை சமாளிப்பதற்காக தனக்குத்தானே ஏற்படுத்திக்கொண்ட தாங்கு மெத்தை ஏற்பாட்டில்தான் அந்தக் காரணம் இருக்கிறது. (நாடுகளை அடிமைப்படுத்திய) காலனியாதிக்கம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் மூலமாக அந்தத் தாங்கு

மெத்தை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின் வந்த ஒரு குறுகிய காலகட்டத்திற்கு, கெய்னீசிய கோட்பாடாகிய, அரசுத் தலையீடு என்பதன் மூலமாகவும் அந்த மெத்தை அமைக்கப்பட்டது. அரசின் ராணுவத் தலையீடு மூலமாகவே காலனியாதிக்கமும் ஏகாதிபத்தியமும் எப்போதும் உறுதிப்படுத்தப்பட்டு வந்துள்ளன; எனவே முதலாளித்துவம் "சுதந்திரமானது" என்பதாக சித்தரிக்கப்பட்டு வருவதற்கு நேர்மாறாக, தனது செயல்பாட்டில் அரசுத் தலையீடு என்பதன் வாயிலாகவே அது தன்னை நிலைப்படுத்திக்கொண்டு வந்துள்ளது என உறுதிபடச் சொல்ல முடியும். ஆக, முதலாளித்துவம் "தானாகச் செயல்படக்கூடியது", "தன்னைத் தானே முறைப்படுத்திக்கொள்ளக் கூடியது" என்பதை அரசு - சமுதாய உறவின் மறைமுகத் தன்மை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை; மாறாக, முதலாளி வர்க்கத்தின் அப்பட்டமான நலன்களுக்காக என்றில்லாமல், ஒட்டுமொத்த சமுதாயத்தின் பெயராலேயே அரசுத் தலையீடு என்பது வழக்கமாக நடத்தப்பட்டு வருகிறது.

முதலாளித்துவ அரசின் சட்டப்பூர்வ சமுதாய முறைமை (அங்கீகாரம்) இந்த உண்மையிலிருந்துதான் உருவாகியுள்ளது. ஆகவே தான், முதலாளி வர்க்க நலன்களுக்காக மட்டுமே என்பதாக அல்லாமல், ஒட்டுமொத்த சமுதாயத்துக்காகச் செயல்படுவது என்ற அடிப்படையில் முதலாளித்துவ அரசு ஒரு வெளிப்படையான உயர்மட்ட சமுதாய உட்கூறாக இருக்கிறது என்ற நிலை, முதலாளித்துவ அமைப்பை நிலைப்படுத்துவதற்கான ஒரு கட்டாயத் தேவையாக இருக்கிறது. முதலாளித்துவ ஜனநாயக வடிவத்தைக் கொண்டதாக அரசு இருக்கிறபோது, அதற்கு மேற்படி நிலை மேலும் பெருமளவுக்குத் தேவையாகிறது. நிதி மூலதனத்தின் நலன்களுக்காகத்தான் அரசு செயல்படுகிறது என்றபோதிலும், ஒட்டுமொத்த சமுதாய நலன்களுக்காகவே தான் செயல்பட்டுக் கொண்டிருப்பதாக அது மாற்றமேயில்லாமல் சொல்லிக் கொள்கிறது. எனினும், அரசின் சட்டப்பூர்வ சமுதாய முறைமை, இவ்வாறு சொல்லிக் கொள்வதை எந்த அளவுக்கு நம்பகத்தன்மையோடு செய்ய முடிகிறது என்பதைப் பொறுத்ததேயாகும்.

ஒட்டுமொத்த சமுதாய நலனுக்காகத்தான் அரசு செயல்படுகிறது என்று சொல்லிக்கொள்வதில் நம்பகத்தன்மை இருக்க வேண்டுமானால், அரசுக் கட்டமைப்புக்குள்ளேயே ஒரு கோட்பாடாக, அது அகநிலைப்படுத்தப்பட வேண்டும். அதிகார வர்க்கத்தின் கணிசமான பகுதியினர் அதில் உண்மையாகவே நம்பிக்கை கொள்ள வேண்டும் (அரசின் மைய அச்சாக இருப்பது தயார் நிலையில் உள்ள ராணுவத்தினர் உள்ளிட்ட அதிகார

வர்க்கத்தினரேயாவர் என்கிறார் லெனின்). அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லையென்றால் அரசு சமுதாயத்தின் உயர்நிலையில் இருந்துகொண்டு அதன் சார்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது என்ற போலித்தோற்றத்தை எந்தவொரு கால அளவுக்கும் பராமரிக்க முடியாமல் போய்விடும். முதலாளித்துவ அமைப்பின் நிலையான தன்மை ஒரு தனித்துவம் வாய்ந்த நிலையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அரசின் பெயரால் செயல்படும் அதிகார வர்க்கத்தினரால் அகவயப்படுத்தப்பட்டுள்ள கோட்பாடானது, முதலாளித்துவ இயங்கு முறையிலேயே உள்ள கோட்பாட்டிலிருந்து மாறுபட்டதாக இருக்க வேண்டும் என்பதே அந்தத் தனித்துவம். முதலாளித்துவ சமுதாயத்திற்கு அப்பாற்பட்டதாக அரசு தெரிய வேண்டுமானால், அரசு முகவர்களின் நோக்கங்கள் முதலாளித்துவ சமுதாய முகவர்களின் நோக்கங்களிலிருந்து - அதாவது முதலாளிகளின் நோக்கங்களிலிருந்து - மாறுபட்டதாக இருக்க வேண்டும். பொது சமுதாயத்திலிருந்து அரசைப் பிரித்து வைப்பது என்பதன் பொருள், இவ்விரு களங்களின் முன்னணி முகவர்களும் சம இடைவெளியில் பிரித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதேயாகும். குறைந்தது அவரவர் நோக்கங்கள், அடிப்படைக் கோட்பாடுகள் ஆகியவற்றிலாவது அவ்வாறு பிரித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்போது நாம் இதன் மையமான முரண்பாட்டிற்கு வருவோம். முதலாளித்துவ அமைப்பை நிலையானதாக வைத்திருக்க இவ்வாறு பிரித்து வைக்க வேண்டிய தேவை இருக்கிறது என்றாலும், முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கு இப்படிப் பிரித்துக்காட்டும் முயற்சிகளையெல்லாம் தடமே இல்லாமல் அழித்துவிட்டு, முதலாளித்துவத்தின் தன்னியல்பான செயல்திட்டத்தை நோக்கி அனைத்தையும் குவிக்கிறது. "பணம் பண்ணுவது" என்பதுதான் அந்த செயல் திட்டம். வேறு சொற்களில் சொல்வதானால், ஒரு முதலாளித்துவ சமுதாய அமைப்பின் அடிப்படை நியதியே, அரசின் அதிகார வர்க்க நோக்கத்தையும், முதலாளிகளை இயக்குவது மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சமுதாயத்திற்குமான பொதுத் தன்மை உடையதாக அரசு மாறுகிற நோக்கத்தையும் பிரித்து வைப்பதற்கான சாத்தியப்பாட்டிற்கு முட்டுக்கட்டை போடுகிறது (இந்த நியதிக்கு ஏன் எதிர்ப்பு ஏற்படுகிறது என்றால், உழைப்பு சமூகமயமாவது பாட்டாளி வர்க்கத்தினருக்கு ஒரு எதிர்ப்புணர்வை ஏற்படுத்துகிறது; மாற்றத்திற்கான முகவர்களாகப் பாட்டாளி வர்க்கத்தினர் உருவாகிறார்கள்). *முதலாளித்துவ அமைப்பின் தன்னியல்பான போக்குகளே, அதன் சொந்த சமுதாய சட்டப்பூர்வ அங்கீகாரத்துக்கான நிலைமைக்குக் குழிபறிப்பதாக உள்ளன; இந்த*

*உண்மையில்தான் முதலாளித்துவ அமைப்பின் பெரும் முரண்பாடு இருக்கிறது.*

இது, இந்த அமைப்பின் "பொருளாதார அடிப்படை" தொடர்பான முரண்பாடுகள் குறித்து வழக்கமாகக் கூறப்பட்டு வருவதிலிருந்து மாறுபட்ட ஒரு கருத்தாகும். இது அமைப்பின் "அடிப்படையோடு" தொடர்பற்றதாக இருப்பது மட்டுமல்ல, ஒரு வலுவான புதுமையான முடிவுக்கும் இட்டுச் செல்கிறது: அதாவது, முதலாளித்துவ அமைப்பு ஒரு போதும் ஒரு "முழுமையான" அமைப்பாக இருக்க இயலாத அமைப்பாகும். அதாவது, முதலாளித்துவ அமைப்புக்கு ஒத்திசைவாகச் செல்கிற, அதே நேரத்தில் தனது சமுதாய அங்கீகாரத்தைப் புதுப்பித்துக் கொள்வதன் மூலம் இந்த அமைப்புக்குப் பங்களிக்கிற ஒரு "மேல் கட்டுமானம்" இருக்க முடியும் என்பதற்கான சாத்தியப்பாட்டிற்கு முதலாளித்துவ அமைப்பின் இந்த "அடிப்படை" அம்சமே குழிபறித்துவிடுகிறது.

# 2. அரசின் 'ஆட்கள்'

முதலாளித்துவ அரசுக்கான ஆட்களாகப் பழைய நிலப் பிரபுத்துவ மன்னராட்சியின் மிச்சசொச்ச ஆட்களே இருந்த வரையில் இந்த முரண்பாடு கட்டுக்குள் இருந்து வந்தது. அதை வைத்து, ஏகாதிபத்தியம் குறித்த ஒரு முழுக் கோட்பாட்டையே உருவாக்கினார் பொருளாதார ஆய்வாளர் ஜோசப் ஷாம்பீட்டர். 1951ஆம் ஆண்டில் அவர், முதலாளித்துவம் அதன் சாராம்சத்தி லேயே அமைதியை விரும்பும் அமைப்பு என்று வாதிட்டார். தனக்கொரு "வீடும் அடுப்பும்" என்பதைத்தாண்டி முதலாளித்துவத் தின் "எல்லைப்பரப்பு" ஆசை செல்வதில்லை என்றார் அவர். ஒரு பேரரசு அமைப்பு வழங்குகிற ஆதாய வாய்ப்புகள் அனைத்தையும் அது பயன்படுத்திக்கொள்ளும், ஆனால் தானே ஒரு பேரரசாக உருவெடுக்க அது முனைவதில்லை என்றும் அவர் கூறினார். முன்னணி முதலாளித்துவ நாடுகள் பேரரசுகளாக மாறத் தீவிரமாக முயன்றது உண்மை. அதற்குக் காரணம் முதலாளிகளை இயக்குகிற பொருளாதார நோக்கங்கள் அல்ல, மாறாகப் பொருளாதாரம் சாராத நோக்கங்களே காரணம் என்றார் ஷாம்பீட்டர். அதாவது, "கவுரவம்", "மாண்பு" ஆகிய கருத்தாக்கங்கள்தான் பேரரசுகளாக மாறும் முயற்சிகளின் மையமாக இருந்தன என்றார். முதலாளித்துவ சமுதாயங்களின் அரசு எந்திரங்களுக்கான ஆட்களை வழங்குகிற நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடிக் கூறுகளால் அந்தக் கருத்தாக்கங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மற்றொரு ஆய்வாளரான ஆஸ்கர் லாங்கே இதில் மாறுபடு கிறார். 1964ஆம் ஆண்டில் அவர் எழுதிய நூலில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த ஏகாதிபத்திய ஆதிக்க முயற்சி களுக்கு ஷாம்பீட்டர் அளித்த விளக்கங்களை அவர் நிராகரித்தார். மாறாக, ஏகபோக முதலாளித்துவம் தலைதூக்கியதோடு இணைந்த பொருளாதார நோக்கங்களே அதற்குக் காரணம் என்று, பொதுவான ஒரு மார்க்சிய அணுகுமுறையோடு கூறினார். எனினும், ஏகபோக முதலாளித்துவத்தோடு இணைந்து அரசின் அதிகார வர்க்க அமைப்பில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது என்று லாங்கே

வாதிட்டார். "முதலாளித்துவத்தின் சுதந்திரப் போட்டி" என்ற காலகட்டத்தில் அரசை நிர்வகித்த நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடி ஆட்கள் இருந்த இடத்தில், இப்போது ஏகபோக முதலாளித்துவக் காலகட்டத்தில் ஏகபோக முதலாளிகளே அமர்ந்துவிட்டார்கள் அல்லது அவர்களது முகவர்கள் அமர்ந்துவிட்டார்கள் என்பது அவரது வாதம். சுருக்கமாகச் சொல்வதெனில் முதலாளித்துவத்துக்கு முந்தைய ஆட்சி வட்டாரங்களிலிருந்துதான் முதலாளித்துவ அரசுக்கான ஆட்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்று லாங்கேயும் நம்பினார்; ஆனால் இந்த அம்சத்தை முதலாளித் துவத்தின் முந்தைய ஏகபோகக் கட்டத்தோடு மட்டும் சுருக்கிப் பார்த்த ஷாம்பீட்டரின் விளக்கத்திலிருந்து மாறுபட்டார்.

# 3. சமுதாய அங்கீகாரம்

ஏகபோக முதலாளித்துவ காலகட்டத்தில் அரசின் கொள்கைகளில் மட்டுமல்லாமல் அதன் அதிகார வர்க்க ஆட்களி லும் ஒரு ஆழமான மாற்றம் ஏற்படுகிறது என்பது குறித்து கவனத்தை ஈர்ப்பதில் லாங்கே மிகச் சரியாகவே செயல்பட்டுள்ளார். ஆய்வாளர் ருடால்ப் ஹில்ஃபெர்டிங் தமது "டாஸ் ஃபினான்ஸ் கேபிடால்" (நிதி மூலதனம்) என்ற அருமையான நூலில், தொழிற் துறைக்கும் நிதிக்கும் இடையேயான ஒரு "தனிப்பட்ட ஐக்கியம்" பற்றிக் கூறுகிறார். அது ஒரு நிதியாதிக்கத்தை உருவாக்கியுள்ளது என்கிறார். நிதி மூலதனத்தின் பெரும் பணத்தைக் கட்டுப்படுத்துகிற அந்த நிதியாதிக்கத்துக்கும் அரசுக்கும் இடையேயான ஒரு "தனிப் பட்ட ஐக்கியம்" பற்றியும் அவர் கூறுகிறார். அதிகார வர்க்கத்தையும் ராணுவத்தையும் சேர்ந்தவர்கள் நிதி மூலதனம் வழங்குகிற வேலைகளுக்குச் செல்வது, நிதி மூலதனத்தின் அலுவலர்களும் அதன் ஊதியம் பெறும் முகவர்களும் முக்கிய அரசுப் பதவிகளைப் பிடித்துக்கொள்வது என்கிற ஒரு போக்குவரத்து ஏற்பட்டது. நிதி மூலதனத்துக்கும் அரசு அதிகார வர்க்கத்தினருக்கும் இடையேயான இந்த நெருக்கம் இனவெறி - பாசிசக் காலகட்டத்தில் உச்சத்தை அடைந்தது. அது குறித்து டேனியல் குயேரின் முதல் மிக்கேல் கலேக்கி வரை பல ஆய்வாளர்களும் விவரித்துள்ளனர். பாசிசத்தின் கீழ் செயல்படும் அரசு எந்திரம் "பெரும் முதலாளிகளுக்கும் புதிய பாசிச நாட்டாமைகளுக்கும் இடையேயான கூட்டின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பதாகும்," என்றுகூட கலேக்கி கூறுகிறார். நாஜி இனவெறியர்கள் கோலோச்சிய ஜெர்மனியில் இந்தக் "கூட்டு" எவ்வாறு நுட்பமாக அமைந்திருந்தது என்பதைப் பற்றி பல இலக்கியப் படைப்புகளும் திரைப்படங்களும் விரிவாகச் சொல்லி யுள்ளன. 1969ஆம் ஆண்டில் வெளியான 'தி டேம்டு' அந்த வரிசையில் ஒரு மிகச்சிறந்த படைப்பாகும்.

இப்படி அரசு முற்றிலும் நிதி மூலதனத்தோடு பின்னிப் பிணைந்ததாக ஆகிறபோது, சமுதாயத்திற்கு அப்பாற்பட்டதாக உயரே நின்றுகொண்டு சமுதாயத்தின் ஒட்டுமொத்த நலன்களையும்

பாதுகாத்துக்கொண்டிருக்கிற கட்டமைப்புதான் அரசு என்ற அதன் தோற்றம் கலைகிறது. நிதி மூலதன ஆதிக்கக் காலகட்டத் திற்கே உரிய ஆட்சிகளின் எதேச்சாதிகாரத் தன்மையைக் காணுகிறபோது (குறைந்தது அந்த குறிப்பிட்ட காலகட்டத்திற்கா வது) அரசுக்கு எவ்வித சமுதாய அங்கீகாரமும் தேவைப்படவில்லை என்று சிலர் கருதக்கூடும். சமுதாய அங்கீகாரம் என்பதற்கு ஒரு மாற்றாகத்தான் அரசு செயல்படுகிறது என்றும் எண்ணத் தோன் றும். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. மிகமிக மோசமான ஒரு எதேச்சாதிகார அரசுக்குக் கூட, ஒரு பாசிச அரசுக்கும்கூட, என்ன தான் அது பயங்கர அடக்குமுறைகளைப் பரவலாகப் பயன்படுத்தி னாலும்கூட, அதற்குப் பிறகும் சமுதாய அங்கீகாரம் தேவைப்படு கிறது. எதேச்சாதிகாரமும் அடக்குமுறைகளும் ஒருபோதும் சமுதாய அங்கீகாரத்துக்கு மாற்றாக முடியாது. அந்த அங்கீகாரத் தைப் பெற இப்படிப்பட்ட ஆட்சிகள் வேறு வழியைப் பயன்படுத் திட முயல்கின்றன: சமுதாயம் மொத்தத்திற்கும் ஒரு பொது எதிரியை உருவாக்குவதுதான் அந்த வழி. அந்தப் பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் அரசு ஈடுபட்டிருப்பதாகக் கிளப்பி விடப்படும். “பெருமை” அல்லது “தேச கவுரவம்” நிலைநாட்டப் படுதல் எனும் ஏகாதிபத்தியத் திட்டத்தின் பின்னே ஒரு பொது நோக்கத்திற்காக சமுதாயம் ஒன்று திரட்டப்படும். (தேசிய உணர்வு பற்றிய பெருமையை வளர்ப்பது என்பதில் நிதி மூலதனக் கோட்பாடு பொதிந்திருக்கிறது என்று ஆய்வாளர் ஹில்ஃபர்டிங் கூறுகிறார்). அல்லது, “தேசத்திற்குக் கடந்த காலத்தில் இழைக்கப் பட்ட அநீதி” ஒன்றை சரிப்படுத்துவது என்ற பெயரில் ஏகாதிபத்தியத் திட்டம் ஒன்று துவக்கப்படும். வேறு சொற்களில் சொல்வதென்றால், பொருளாதார ஆளுமைக் களத்தில் இழந்த சமுதாய அங்கீகாரத்தை வேறு வகையில் ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்யப்படுகிறது. அதற்காக, அடிப்படையில் ஏகாதிபத்தியத்தன்மை வாய்ந்த, இன வாத, அந்நியப் பகைமை கொண்ட ஒரு “தேசம்” என்பது கட்டப் படுகிறது (இந்த அந்நியப் பகைமை என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு போன்றதல்ல, அதற்கு நேர்மாறான தாகும்); அந்த “தேசம்” என்ற கட்டுமானத்தைச் சுற்றி ஒரு பொதுக் கருத்து உருவாக்கப்படுகிறது; அதற்கு ஊடகங்கள் பயன்படுத்தப்படு கின்றன - அந்த ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதே நிதி ஆதாய நோக்கங்கள்தாம். சமுதாயத்தின் பொது எதிரியை எதிர்த்துப் போராடுவது என்ற பெயரில், அல்லது அந்தப் பொது நோக்கத்தை எட்டுவது என்ற பெயரில், நிதி மூலதனத்தோடு பின்னிப் பிணைந்த தாக அரசு இருப்பதும் பரவலாக பயங்கர அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதும் நியாயப்படுத்தப்படுகின்றன. அந்தப் பொதுத் திட்டத்தின் பெயரால் யுத்தம், ஆக்கிரமிப்பு, நாடுகளை

வளைத்து இணைத்துக்கொள்வது ஆகிய அனைத்தும் நியாயப் படுத்தப்படுகின்றன. எனினும் இவை யாவும் உருவகப்படுத்துவது அரசின் சமுதாய அங்கீகாரத்துக்கான ஒரு மாற்றுத் தேடலைத்தான்.

ஆனால், இது மட்டுமே இச்செயல்களின் ஒரே நோக்கமல்ல என்று உறுதியாகக் கூறலாம். இத்தகைய நாடு பிடிப்பு முயற்சிகளுக்கும் யுத்தங்களுக்கும் பின்னால், சக்திமிக்க பொருளாதார அம்சங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால், நாடு பிடித்தல், யுத்தம் ஆகியவற்றை ஊக்குவிப்பதில், மேற்கட்டுமானத் தோடு தொடர்புடைய பிரச்சனைகளும் ஒரு முக்கியமான, கூடுதலான பங்காற்றுகின்றன. இது குறித்து லெனின் தமது 'ஏகாதிபத்தியம்' என்ற நூலிலேயே குறிப்பிட்டிருக்கிறார். ஏகாதிபத் தியத்தின் பின்னே இருக்கும் பொருளாதார நோக்கங்கள் பற்றி விவாதிக்கிற அவர், அத்தோடு, "நிதி மூலதனம், அதன் அரசியல், அதன் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் வளர்கிற பொரு ளாதாரம் சாராத மேற்கட்டுமானமானது, காலனியாதிக்கத்துக்குக் கடுமையாக முயலுமாறு தூண்டுகிறது," என்ற உண்மையையும் அவர் எடுத்துரைத்தார்.

ஆக ஷாம்பீட்டர் முன்வைத்த கருத்துடன் ஒத்துப்போகிற, அதே நேரத்தில் அதற்கு நேர்மாறானதாகவும் இருக்கிற ஒரு முடிவுக்கு நாம் வருகிறோம். பொருளாதார அம்சங்களோடு சேர்த்துக் கூடுதலாக உள்ள, ஆனால் பொருளாதாரத்தோடு மட்டுமே சுருக்கிவிட முடியாத, சக்திவாய்ந்த அம்சங்கள் உள்ளன; அந்த அம்சங்கள் ஏகபோக முதலாளித்துவக் காலகட்டத்தில் ஏகாதிபத்தியத்தையும் யுத்தத்தையும் நாடு பிடிப்பையும் கட்டவிழ்த்து விடுவதில் ஒரு முக்கியப் பங்காற்றுகின்றன. ஆனால் இவை, முதலாளித்துவ அரசு எந்திரத்தை நிர்வகிக்கும் பழைய மன்னர்கால ஆட்களால் வெளிப்படும் மாண்பு, கவுரவம் ஆகிய வற்றுக்கான நிலப்பிரபுத்துவ வேட்கைக்கு பழமைவாதக் கண்ணோட்டத்தோடு திரும்பிச் செல்வதை உருவகப்படுத்துபவை அல்ல. மாறாக, மாற்றமடைந்துள்ள ஒரு மேற்கட்டுமானத்தின் விளைவுகளே இவை. இதில், முக்கியஅரசுப் பதவிகளை வகித்து வந்த பழைய நிலப்பிரபுத்துவ மன்னராட்சிக் கால வாரிசுகள் அகற்றப்பட்டு அந்த இடத்தில், நிதி மூலதனத்தோடு நெருக்கமான "தனிப்பட்ட ஐக்கியம்" உள்ள புதிய அதிகார வர்க்கத்தினர் அமர்ந் துள்ளனர். சுருக்கமாக, சாராம்சத்திலேயே அவர்கள் "முதலாளித் துவக் கூறுகளேயாவர்". மேலும், முதலாளித்துவ சமுதாயம் நிதி மூலதனத்தைத் தலைமைப் பீடத்திற்குக் கொண்டு வருகிறது, அது அரசின் முந்தைய சமுதாய அங்கீகாரத்தை ஒழிக்கிறது என்ற தர்க்கவாதம் இருக்கிறதே, அது அவர்களது புதிய சமுதாய அங்கீகாரத்துக்கான முயற்சிகளுக்கு உறுதுணையாக அமைகிறது.

# 4. பொது எதிரி உருவாக்கம்

இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின் காலனியாதிக்கம் தகர்ந்த காலகட்டமும், கெய்ன்ஸ் கூறுகிற தேவை நிர்வாகமும், ஒரு வகையில், நிதி மூலதனத்தின் தலைமைக்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவை வெளிப்படுத்தின. யுத்தத்திற்குப் பின் உருவான குறிப்பான சூழலால் அந்தப் பின்னடைவு சாத்தியமானது. உலக அளவில், யுத்தத்திற்குப் பின் ஏராளமான இழப்புகளோடும் ஏராளமான சிறப்புகளோடும் சோவியத் யூனியன் தலைநிமிர்ந் திருந்தது. சோசலிச முகாம் வியத்தகு முறையில் விரிவடைந்திருந்தது. வட்டார அளவில் பணக்கார நாடுகளில், யுத்தத்தில் மிகப்பெரும் தியாகங்களைச் செய்திருந்த தொழிலாளி வர்க்கம் பழைய நாட்களுக்குத் திரும்பிச் செல்ல விரும்பவில்லை. பிரான்ஸ், இத்தாலி, கிரீஸ் ஆகிய நாடுகளில் சோசலிச ஆட்சி ஏற்படுவதை ஏகபோக முதலாளித்துவம் கடும் முயற்சிகள் செய்து தடுத்தது; கடைசி முயற்சியாக உண்மையான ஒரு யுத்தத்தையும் நடத்தித் தடுத்தது. பிரிட்டனில், யுத்த காலத்தில் பிரதமராக இருந்தவரும், உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தவரை நிதி ஆதிக்கத் தைப் போலவே பிரிட்டிஷ் பேரரசையும் பாதுகாப்பதில் உறுதி யுடன் இருந்தவருமான வின்ஸ்டன் சர்ச்சில், யுத்தத்திற்குப் பின் நடந்த தேர்தலில் தொழிலாளர் கட்சியிடம் தோல்வியடைந்தார். காலனியாதிக்கத்துக்கு அடிமைப்பட்டிருந்த நாடுகளில் தேச விடுதலைப் போராட்டங்கள், அவற்றின் மீது ஏகாதிபத்தியம் தனது பிடியை இனிமேலும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது என்கிற அளவுக்கு, செயல்வேகம் பிடித்தன என்பதும் உண்மைதான். கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையிலான போராட்டங்களை, பொது வாக மலேயா, அல்ஜீரியா, வியட்னாம் ஆகிய நாடுகளில் போர்க் குணமுள்ள தேச விடுதலைப் போராட்டங்களை ஏகாதிபத்தியம் யுத்தங்களின் மூலமாகத் தடுத்து நிறுத்த முயன்றது. மலேயாவில் சீன இனத்தவர்களுக்கும் மலாய் மக்களுக்கும் இடையே உட்பூசல் களைக் கிளறிவிடுவதன் மூலம் அதில் தனது முதல் வெற்றியைப் பெறவும் செய்தது (இந்தியத் துணைக் கண்டத்தில் முன்பு

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பூசலைக் கிளப்பியது போன்றது இது). இருந்தபோதிலும் காலனி நாடுகளில் தனது பிடியை ஏகாதிபத்தியத்தால் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை.

மாறிய இந்தச் சூழலில், சமுதாயத்திற்கு அப்பாற்பட்ட மேல்நிலையில் இருந்து கொண்டு ஒட்டுமொத்த சமுதாய நலன் களையும் பாதுகாக்கிற அமைப்புதான் அரசு என்ற கருத்தாக்கத் திற்குப் புத்துயிரூட்டியாக வேண்டியிருக்கிறது; நிதி மூலதனத்துக்கு ஏற்புடையதாக இல்லாத வழிகளில் அரசு செயல்பட்டாக வேண்டியிருக்கிறது. கெய்னீசிய ஆய்வின்படி, நிதி மூலதனத்துக்கு ஒவ்வாததாகிய தேவை நிர்வாகம் (அப்படி ஒவ்வாததாக இருப்ப தால்தான் அதனை "சுகவாசியின் வலியில்லா மரணம்" என்று வர்ணிக்கிறார் கெய்ன்ஸ்), பணக்கார நாடுகளை முழு வேலை வாய்ப்பு நிலையை நோக்கி, முதலாளித்துவ அமைப்பின் கீழ் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குத் தள்ளியது. மூன்றாம் உலக நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்ட அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குரிய பொருளாதார மேம்பாட்டு அணுகுமுறைகளின் காரணமாக, கணிசமான அளவுக்கு அரசுச் செலவினங்கள் ஏற்பட்டன; அது மட்டுமல்லாமல் ஒரு பொதுத்துறை என்பது நிலையாகவும் குறிப்பிடத்தக்க அளவுக்கும் உருவாகியது. இந்தப் பொதுத்துறை என்பதும் பணக்கார நாடுகளின் நிதி மூலதனத்துக்கு ஒவ்வாததாகும். (மூன்றாம் உலக நாடுகளின் உள்நாட்டு நிதி அக்கறைகளின் பலம் வரம்புக்குட்பட்டதேயாகும்.)

இப்படிச் சொல்வது ஏகாதிபத்தியம் மறைந்து விட்டதாகக் கூறுவதாகாது. முன்னர் குறிப்பிட்டது போல், ஏகாதிபத்தியம் எப்போதுமே முதலாளித்துவத்தின் ஒரு ஒருங்கிணைந்த அங்க மாகவே இருந்து வந்திருக்கிறது; அதன் அனைத்துக் கட்டங்களி லும் அப்படியே தொடர்ந்து இருக்கும். காலனியாதிக்கத் தகர்வு என்பது ஏகாதிபத்தியத்துக்கு ஒரு பின்னடைவுதானேயன்றி, அதன் முடிவல்ல. இதே நிகழ்ச்சிப் போக்கு உலக அளவிலும் உள்நாட்டு அளவிலும் வர்க்க சக்திகளின் உறவு நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அந்த மாற்றம், காலனியாதிக்கப் பேரரசுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அத்துடன் முதலாளித்துவ உலகம் முழு வதிலும் அரசு - சமுதாய உறவிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. இரண்டு உலக யுத்தங்களுக்குக் காரணமாக அமைந்த, ஏகபோகப் போட்டியாளர்களின் தீவிரமான நாடு பிடிக்கும் முயற்சி புதிய சூழலில் தடுக்கப்பட்டது, ஓரளவுக்குப் பின்வாங்கவும் செய்தது. எனினும் பணக்கார நாடுகளின் முதலாளித்துவம் உலகப் பொருளாதாரத்தில் தனது ஆதிக்கத் தலைமையைத் தக்க வைக்க மற்ற வழிமுறைகளைக் கையாள்கிறது.

ஆனால், யுத்தத்துக்குப் பின் உருவான இந்தச் சூழ்நிலை கடந்து சென்றுவிட்டது. அப்படி கடந்து சென்றாக வேண்டிய நிலை ஏற்பட்டது. முதலாளித்துவத்தின் நியதி, நிதி மூலதனத்தின் ஆதிக்கத் தலைமையை மறுபடியும் உறுதிப்படுத்தியது; ஆனால் பழைய "தேசிய" வடிவத்தில் அல்ல, புதிய "உலகமய" நிதி மூலதனம் என்ற போர்வையில். அதன் விளைவாக, பணக்கார நாடுகளில் 'தேவை நிர்வாகம்' எனும் கெய்னீசிய கோட்பாடு கைவிடப்பட்டது. மூன்றாம் உலக நாடுகளில் அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொருளாதாரக் கொள்கை அணுகுமுறைகள் கைவிடப்பட்டன; எங்கும் அரசுச் செலவினங்களை வற்றிப்போகச் செய்யும் கொள்கைகள் கொண்டு வரப்பட்டன. (இதில் அமெரிக்கா மட்டும் விதிவிலக்கு; ஏனெனில் "தங்கத்துக்கு நிகரான மதிப்பு வாய்ந்தது" எனக் கூறப்படும் அமெரிக்கப் பணம் அதற்கு இந்த அம்சத்தில் ஓரளவு சுதந்திரம் தருகிறது). இவ்வாறு அரசுச் செலவுகள் சுருக்கப்படுவதையே நிதி மூலதனம் ஆதரிக்கிறது. மாபெரும் பொருளாதார சரிவு ஏற்பட்டதற்குப் பிந்தைய காலகட்டத்தைவிட, இரண்டாம் உலகயுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் அரசுச் செலவுகளைக் கைவிடும் கொள்கையைச் செயல்படுத்துவது மிகக் கடினமானதாகவே இருந்தது.

எனினும், அதே நேரத்தில் - ஆனால் வியப்பதற்கேதுமில்லை என்ற முறையில் - முதலாளித்துவ அரசின் சமுதாய அங்கீகாரம் பற்றிய பழைய கேள்வியும் மீண்டும் எழுகிறது. குறிப்பாக, அரசாங்கக் கட்டுப்பாடுகள் கைவிடப்பட்ட நிலையில், வருமான ஏற்றத்தாழ்வும் செல்வ வள ஏற்றத்தாழ்வும் மிகப்பெரும் அளவுக்கு அதிகரித்த சூழலில் அந்தக் கேள்வி தன்னை முன்னிறுத்திக் கொள்கிறது. நவீன - தாராளவாதக் கொள்கைகள் செயலாக்கப்படுவதன் மூலம் பன்னாட்டு நிதி மூலதனத்தின் புதிதாகப் பெறப்பட்ட ஆதிக்கத் தலைமை வெளிப்படுகிற பணக்கார நாடுகள், மூன்றாம் உலக நாடுகள் இரண்டிலுமே அந்த ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. நிதி மூலதனத்தோடு மறுபடியும் பின்னிப் பிணைந்து வருகிற, வருமான - வள ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பதற்கு நேரடிக் காரணமான நவீன - தாராளவாதக் கொள்கைகளைச் செயல்படுத்துகிற முதலாளித்துவ அரசுக்கு, யுத்தத்துக்கு முந்தைய நிதி மூலதனக் காலகட்டத்தில் தேவைப்பட்டது போலவே, சமுதாய அங்கீகாரத்தைப் பெறுவதற்கான புதிய வழிமுறைகள் தேவைப்படுகின்றன.

இன்று உலகளாவிய நிதி மூலதனத்தோடு மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ள முதலாளித்துவ அரசுக்கு ஒரு புதிய சமுதாய அங்கீகாரத்தைத் தயாரிப்பதற்காக, மேற்கூறிய சூழலில் ஒரு புதிய எதிரி - "பயங்கரவாதம்" என்ற புதிய எதிரி - மிகப்பெரிதாக

உருவாக்கப்படுவதிலும், ஒரு மதவாத - வகுப்புவாத உணர்வு வளர்க்கப்படுவதிலும் வியப்பில்லை. "பயங்கரவாதம்" என்பது கற்பனையல்ல, அது ஒரு உண்மையான நிலைமை என்று சிலர் வாதிடக்கூடும். முதலாளித்துவ அரசு அமைப்புக்கு ஒரு சமுதாய அங்கீகாரம் பெற வேண்டியே "பயங்கரவாதம்" பற்றிப் பெரிது படுத்தப்படுவதாகக் கூறுவது "பயங்கரவாதத்தின்" மெய்யான அச்சுறுத்தலைக் குறைத்து மதிப்பிடுவதாகும் என்றும் அவர்கள் வாதிடக் கூடும். "பயங்கரவாதம்" என்பது உண்மையாக இருப்பது தான் (அதனை வளர்த்துவிட்டதே ஏகாதிபத்தியம்தான் என்றாலும் கூட); அது இருந்துகொண்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இங்கு காணப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், அதனை எதிர்கொள்வதற்காக பணக்கார நாடுகளின் அரசுகள் - குறிப்பாக அவற்றின் தலைமைப் பாத்திரத்தை வகிக்கும் அரசு - கடைப்பிடிக்கும் வழிமுறை, "பயங்கரவாத" அச்சுறுத்தலை உயிரோடு வைத்திருப்பதாகவே இருக்கிறது. ஈராக் நாட்டை ஆக்கிரமித்திருக்கும் செயல் இதனைத் தெளிவாக மெய்ப்பிக்கிறது.

இந்த நிகழ்வுகளிலிருந்து தெளிவாகிற ஒரு முக்கிய முடிவு - "அமைதியான முதலாளித்துவம்" என்பதற்கான எதிர்பார்ப்புகள் வெறும் மாயை என்பதுதான். இதற்கு அடிப்படையான காரணம் என்னவென்றால், முதலாளித்துவத்திற்கு ஒரு பொருளாதாரக் கட்டாயத் தேவையாக ஏகாதிபத்தியம் தேவைப்படுகிறது. சமகால ஏகாதிபத்தியத்தின் தனித்தன்மையை வடிவமைப்பது பன்னாட்டு நிதி மூலதனத்தின் உலகளாவிய ஆதிக்கம்தான், அந்தப் பன்னாட்டு நிதி மூலதனம் குறிப்பிடத்தக்க வகையில் - ஆனால் தனித்துவமானது என்பதாக அல்லாமல் - பணக்கார நாடுகளைச் சார்ந்ததாக இருக்கிறது, மூன்றாம் உலக நாடுகளிலும் அதன் கூறுகள் உள்ளன என்ற போதிலும் முதலாளித்துவத்துக்கு ஏகாதிபத்தியம் தேவைப் படுகிறது. எனினும், இதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. பன்னாட்டு நித மூலதன காலகட்டத்தில், "பொருளாதாரம் சாராத மேற்கட்டுமானம்" (இந்த சித்தரிப்பு லெனின் கூறியதாகும்), முதலாளித்துவ அரசின் சமுதாய அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஒரு வெளி எதிரியை சுட்டிக்காட்டியாக வேண்டும், அந்தப் பொது எதிரிக்கு எதிராக ஒட்டுமொத்த சமுதாயத்தையும் ஒன்றுபடுத்தக் கூடிய வகையில் அப்படியொரு வெளி எதிரியைக் காட்டியாக வேண்டும் என்பதைக் கட்டாயத் தேவையாக்குகிறது. அப்படி ஒரு எதிரியை சுட்டிக்காட்டிவிட்டால் அதன்பிறகு அந்த எதிரியோடு சமாதான சகவாழ்வு என்பது சாத்தியமற்றதாகிவிடும்.

# 5. வறுமையும் வன்முறையும்

இதுவரை கூறியதெல்லாம் இந்தியாவுக்கும் பொருந்துவதாகும். பொது முதலீடுகளை மேற்கொண்டு, பொதுத்துறையைக் கட்டிய நேருவிய அரசுக்கு (ஜவஹர்லால் நேருவால் உருவாக்கப் பட்ட கொள்கைக்கு 'நேருவியம்' என்பது அடையாளச் சொல்) அதிகார வர்க்கமும் ஆதரவாக இருந்தது; அதிகார வர்க்கத்தின் கணிசமான பகுதியினர் நேருவிய கொள்கைகளின் பால் ஈர்க்கப்பட்டிருந்தனர். இதர மூன்றாம் உலக நாடுகளின் அரசாங்கக் கட்டுப்பாடு சார்ந்த ஆட்சிகளும் இதைத்தான் செய்தன. இவை "இடைநிலை ஆட்சிகளாக" அமைந்தன என்கிறார் ஆய்வாளர் மிக்கேல் கலேக்கி. இவற்றின் ஆளும் வர்க்கமாக உருவானவர்கள் சிறு முதலாளிகள் என்றார் அவர். இந்தக் கருத்து மிகைப்படுத்தப் பட்டதுதான் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஒட்டுமொத்த சமுதாய நலனுக்காக செயல்பட்ட, ஒப்பீட்டளவில் தன்னாளுமை உள்ள முதலாளித்துவ அரசு ("திட்டமிட்ட வளர்ச்சி" என்பதை அமைப்பு முறையாகவே செயல்படுத்தி, தன்னை ஒரு "சோசலிச அரசு" என்று சொல்லிக் கொள்கிற அளவுக்கு அது சென்றது), முதலாளி வர்க்கத்திலிருந்து தள்ளி நின்ற தனது தனித்துவமான சிறப்பியல்பை நிச்சயமாகப் பெற்றது. நகரம், கிராமம் ஆகிய இரு பகுதிகளையும் சேர்ந்த சிறு முதலாளி வர்க்கத்தின் அணிகளிலிருந்தே தனக்கான அதிகார வர்க்கத்தினரை எடுத்துக்கொண்டதன் மூலம் அந்தச் சிறப்பியல்பை இந்த முதலாளித்துவ அரசு பெற்றது. சிறு முதலாளி வர்க்க அணிகளிலிருந்து எடுக்கப்பட்ட அரசு நிர்வாகத்தினர், முதலாளி வர்க்கம் பற்றிய ஐயப்பாடுகள் கொண்டவர்களாக, ஓரளவுக்கு அதை வெறுப்பவர்களாகவும் இருந்தனர். காலனியாதிக்கம் தகர்ந்த புதிய சூழலில் சுய முன்னேற்றத்துக்கான ஒரு வழியாகவும் அவர்கள் அரசு முதலாளித்துவத்தைக் கண்டனர். அரசு முதலாளித்துவத்தின்பால் உறுதியான பற்றுறுதி கொண்டிருந்தனர். இது ஒரு முதலாளித்துவ அரசுதான், முதலாளித்துவ வளர்ச்சிக்கு அடித்தளங்கள் அமைத்துக் கொடுத்த அரசுதான். ஆனால், அதன் நோக்கமும், கோட்பாட்டுச் சார்புகளும், அரசு

நிர்வாகப் பொறுப்பாளர்களின் வர்க்கப் பின்னணியும், அரசுக்கு ஓரளவு தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்தியது. ஏகாதிபத்தியத் திடமிருந்தும், உள்நாட்டு முதலாளிகளிடமிருந்தும் நேரெதிராக விலகி நின்ற தன்னாட்சி அது.

அரசாங்கக் கட்டுப்பாடு சார்ந்த வியூகத்திற்கு மாறாக நவீன - தாராளவாத வியூகம் மேலோங்கியது. உள்நாட்டில் நிலவிய முரண்பாடுகளும் உலகளாவிய முரண்பாடுகளும் அதற்கு இட்டுச் சென்றன. அந்த முரண்பாடுகள் குறித்த ஆய்வுகளில் இறங்கி இப்போது அலசிக்கொண்டிருக்கிற உள்ளடக்கத்திலிருந்து நாம் விலகத் தேவையில்லை. ஆனால், உலகமயமாக்கப்பட்ட நிதி எனும் உலகத்தோடு நெருங்கிய ஒருங்கிணைப்பு என்பதன் வெளிப்பாடாகிய நவீன - தாராளவாத வியூகத்துடன் இணைந்திருப்போர் ஒரு மாறுபட்ட அரசு ஆட்களாவர் என்பதைப் பற்றி மேலும் பார்க்கலாம். "நவீன தாராளவாத அரசு" என்பதும், பொருளாதாரக் கட்டுப்பாட்டுக் கொள்கை கொண்ட அரசைப் போலவே, ஒரு முதலாளித்துவ அரசுதான். ஆனால், நவீன- தாராளவாத அரசின் அதிகார வர்க்கத்தினர் அடிப்படையிலேயே, இரண்டாவது வகை அரசின் அதிகாரவர்க்கத்தினரிடமிருந்து மாறுபட்டவர்கள். உலக வங்கி உள்ளிட்ட பிரெட்டன் உட்ஸ் நிறுவனங்களின் கண்ணோட்டங்களோடு நெருக்கமாக இணைந்துள்ள கோட்பாட்டுச் சார்பு நிலைகளில் மட்டுமே அவர்கள் மாறுபட்டவர்கள் என்பதல்ல. நிதி மற்றும் பெரும் தொழில்களின் உலகத்தோடு ஆழமான பிணைப்புக் கொண்டவர்கள் என்ற வகையிலும் அவர்கள் மாறுபட்டவர்களாவர். இன்றைய அரசு அமைப்பில் நாம் காணுகிற அதிகார வர்க்கத்தினர் ஒரு மாறுபட்ட கொள்கையாளர்கள் - உலக வங்கிக் கொள்கையாளர்கள் மட்டுமேயல்ல. பொருளாதாரத் துறையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த அரசாங்கத்தை நிர்வகித்த நேருவியக் கொள்கையாளர்களிடமிருந்து மாறுபட்டவர்கள் மட்டுமேயல்ல இவர்கள். மாறாக, பெருமுதலாளித்துவ நலன்களிலிருந்தும் நிதி சார்ந்த நலன்களிலிருந்தும் மாறுபடாத நோக்கத்தைக் கொண்டவர்கள் இவர்கள். எனவே, நிதி மூலதன நலன்களோடு நெருக்கமாக ஒருங்கிணைந்திருப்பது குறித்து எவ்வித உறுத்தலும் இல்லாதவர்கள் இவர்கள்.

இவ்வாறாக, குறிப்பாக நவீன- தாராளவாதக் கொள்கைகளைச் செயல்படுத்துவதோடு தொடர்புடையதாக வளத்திலும் வருமானத்திலும் மிகப்பெருமளவுக்கு சமத்துவமின்மை அதிகரிக்கும் சூழலில், மேற்கூறிய நிலைமையின் விளைவாக அரசு அமைப்புக்கான சமுதாய அங்கீகாரம் அடியறுக்கப்படுவது, மாற்று வழிகளில் அந்த அங்கீகாரத்தைப் பெற முயல்வது, அதற்காக

"தேசம்" ஒரு வல்லரசாக ("இந்தியா ஒளிர்கிறது") மாறப்போகிறது என்றும், உள்நாட்டு "ஐந்தாம்படை" ஆதரவோடு செயல்படும் அந்நிய எதிரிகளால் "தேசம்" அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது என்றும் இரண்டுவித மயக்கக் கருத்துக்களை கலந்து கொடுப்பது ஆகியவை இந்தியாவில் மிகப் பளிச்செனப் புலப்படுகிற காட்சிகளாகும்.

மேற்கூறிய வாதத்திலிருந்து இரண்டு கருத்துக்கள் எழு கின்றன. முதலாவதாக நமது ஆகப் பெரும்பாலான மக்களின் அவல நிலைமைகளை மாற்றிச் சீராக்குதல் என்பதை, அதிகமான வளர்ச்சி வீதத்திற்கு இட்டுச் செல்கிற நவீன தாராளவாத வியூகத்தைச் செயல்படுத்துவதன் மூலம் சாதித்துவிட முடியும் என்ற ஒரு கண்ணோட்டம் முன்வைக்கப்படுகிறது. முற்போக்கான சிந்தனை கள் கொண்டோர் உட்பட பலராலும் மனமுவந்து ஆதரிக்கப் படுகிற இந்தக் கண்ணோட்டம் முற்றிலும் தவறானதாகும். ஏற்கெனவே நன்கறியப்பட்ட பொருளாதாரக் காரணங்களால் மட்டுமே இது தவறான கண்ணோட்டமாகி விடவில்லை; அதாவது, இத்தகைய வளர்ச்சியின் வேலைவாய்ப்புத் திறன் மிகக் குறைவாக இருக்கிறது ("வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி"), அந்த வளர்ச்சி வேகம் அதிகரித்தாலும்கூட அதன் வேலைவாய்ப்புத் திறன் சரிவடைகிறது என்ற காரணங்களால் மட்டுமே இது தவறானதாகிவிடவில்லை. வேறொரு கூடுதலான காரணத்துக்காகவும் இது தவறான கண்ணோட்டமாகிறது. "பொருளாதாரம் சாராத மேற்கட்டு மானம்" என்பதோடு தொடர்புடைய காரணம் அது. அதாவது, நவீன - தாராளவாத வியூகத்தைச் செயல்படுத்துகிற அரசு, அதன் உள்ளார்ந்த தன்மை காரணமாகவே ஏழைகளின் துயரங்களைப் போக்கும் திறனற்றதாக இருக்கிறது. அதன் அதிகார வர்க்கத்தினர், நவீன - தாராளவாத வியூகத்தைப் பின்பற்றுகிற காரணத்தாலேயே, பெரும் முதலாளிகள் மற்றும் நிதி நலன்களோடு அதிகமாகப் பிணைந்திருக்கிறார்கள். "பணம் பண்ணுகிற" உலகத்தில் மிகவும் அதிகமாகவே தடுமாறிப் போயிருக்கிறார்கள். எனவே, ஏழைகளின் வாழ்க்கை நிலைமைகளில் ஏதேனும் மாற்றத்தைக் கொண்டுவரவும் இயலாதவர்களாக இருக்கிறார்கள். நாட்டின் திட்டக்குழு தனது பதினோராவது திட்டத்துக்கான அணுகுமுறை அறிக்கையில், ஏழைகளின் துயரங்களைப் போக்குவதற்கேற்ற நிலைமைகள் அதிகமான (பொருளாதார) வளர்ச்சி வீதம் காரணமாக ஏற்பட்டு விடும் என்று கூறுகிறது. நமது பிரதமர், பத்து சதவீத வளர்ச்சியை எட்டிவிட்டால் அது அவலங்களை அகற்றிவிடும் என்று கருது கிறார். திட்டக்குழு அறிக்கை, பிரதமர் கருத்து ஆகிய இரண்டுமே ஒரு உண்மையைக் காணத் தவறுகின்றன. அதிகமான வளர்ச்சி

வீதத்தைக் கொண்டு வரும் என்பதாகக் கருதப்படுகிற நவீன-தாராளவாத அரசு அமைப்பு, அதன் உள்ளார்ந்த தன்மையின் காரணமாக, எந்த ஒரு துயரத்தையும் துடைத்தெறிய முடியாது என்ற உண்மைதான் அது.

தற்போது நான் பணியாற்றிவரும் கேரள மாநிலத்தில், ஏழ்மையான மாவட்டங்களில் ஒன்று வயநாடு மாவட்டம். மிக அதிகமான எண்ணிக்கையில் விவசாயிகளின் தற்கொலைகள் நிகழ்ந்த மாவட்டம் அது. அந்த மாவட்டத்திற்காக மத்திய அரசு பல உதவித் திட்டங்களை அறிவித்திருக்கிறது. ஆனால் அந்த மாவட்டத்திற்கு ஆட்சியராகவோ, மருத்துவ அதிகாரிகளாகவோ செல்ல விரும்புகிற அதிகாரிகள் மிகக் குறைவு. அரசுக் கல்வி நிறுவனங்களுக்குப் பொறுப்பேற்கத் தயாராக உள்ள அதிகாரிகளும் குறைவு. அந்த மாவட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவிடுவதில் ஆர்வமற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதைவிட, அந்த மாவட்டத்தில் நியமிக்கப்படுவதையே விரும்பாதவர்களாக அதிகார வர்க்கத்தினர் இருக்கிறார்கள் என்பதால், அந்தப் பணம் செலவிடப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறது. வயநாடு மாவட்டத்தில் என்ன நடக்கிறதோ அதுதான் கேரளத்தின் இதர வறிய மாவட்டங்களிலும் நடக்கிறது; கேரளத்தில் என்ன நடக்கிறதோ அதுதான் மற்ற மாநிலங்களிலும் நடக்கிறது என்பது நிச்சயம். நவீன - தாராளவாத அரசின் இதே அதிகார வர்க்க ஆட்கள், “உள்கட்டுமானம்” என்பதாகக் கூறப்படும் துறையோடு தொடர்புள்ள “மேம்பாட்டுத் திட்டங்கள்” என்பதாகக் கூறப்படும் திட்டங்களை எடுத்துக் கொள்வதில் ஏகப்பட்ட ஆர்வ முனைப்பைக் காட்டுகிறார்கள். இந்த உள்கட்டுமானம் என்பது பெரும்பாலும் நில மோசடிக்கான கவர்ச்சிப் பெயரேயாகும். இவர்கள் எந்த அளவுக்கு நிதி மூலதன நலன்களோடு பிணைந்திருக்கிறார்கள் என்றால், வறுமை ஒழிப்பிலெல்லாம் இறங்க நேரமே இல்லாத அளவுக்கு.

வறுமை ஒழிப்புத் திட்டங்களோடு மட்டும் தொடர்புள்ள விவகாரமல்ல இது. நவீன - தாராளவாத அரசின் அதிகார வர்க்கத்தினர் பொதுத்துறை நிறுவனங்களை இயக்குவதில் கொஞ்சமும் ஆர்வமற்றவர்கள். பொதுத்துறை நிறுவனங்கள் காலப்போக்கில் பொருளாதார ரீதியாகக் கட்டுப்படியாகாதவையாக மாறிவிடுவதற்கும், அவற்றைத் தனியார் மயமாக்க விரும்புவோருக்கு அதுவே ஒரு சாக்காகிவிடுவதற்கும் அதிகார வர்க்கத்தினரின் இந்தப் போக்கும் ஒரு காரணமாகும். சாதாரணமான அரசுப் பணிகளைக் கூட அதிகார வர்க்கம் நிறைவேற்றுவதில்லை. பெருந்தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த புரவலர்களோடும் வெளிநாட்டு

நன்கொடையாளர்களோடும் இணைந்து பணியாற்றுவதில்தான் அதிக ஆர்வத்தோடு ஈடுபடுகிறது. அரசாங்க நிர்வாகத்தின் சிக்கலான திட்டங்களைவிட, உலக வங்கியின் நிதியுதவியோடு நடத்தப்படும் பயிற்சித் திட்டங்களில் பங்கேற்பதில்தான் அதிகாரவர்க்கம் அதிக அக்கறை காட்டுகிறது. இதன் விளைவாக, அரசாங்கப் பணிகள் மேலும் மேலும் தனியார் அமைப்புகளிடம் "வெளி ஏற்பாடாக" (அவுட் சோர்சிங்) ஒப்படைக்கப்படுகின்றன. அப்படி வெளியாட்களிடம் வேலைகளை விடுவது அனைவருக்கும் ஆதாயம் கிடைக்க வழி செய்கிறது.

இவ்வாறு நிதி நலன்களோடும் பெரும் தொழில் வர்த்தக நலன்களோடும் கலந்து பிணைந்துள்ள நவீன-தாராளவாத அரசு, எந்தவொரு வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான உள்ளார்ந்த திறனற்றதாக மாறுகிறது. அடுத்தடுத்த கட்டங்களாக நவீன-தாராளவாதம் பயனளிக்கும் என்று கூறப்படுகிறது. "முதல் கட்டத்தில்" நவீன - தாராளவாதக் கொள்கைகள் செயல்படுத்தப்பட வேண்டும், அது "இரண்டாவது கட்டத்தில்" மறுவிநியோகத்துக்கான தளத்தை அமைத்துக் கொடுக்கும் என வக்காலத்து வாங்கப்படுகிறது. இந்த "கட்டங்கள் கோட்பாடு" எவ்வளவு உள்ளீடற்றது, வெறுமையானது என்பதைத்தான் அரசின் மேற்படி உண்மை நிலை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

நமது வாதத்திலிருந்து வருகிற இரண்டாவது கருத்தை இப்போது பார்ப்போம். தற்போதைய இடைக்கால நிலைமை எப்படி இருந்தாலும், ஒரு பக்கம் வன்முறையையும் ஒடுக்குமுறைகளையும் அரசு நாடுவது (பதிலுக்கு அது எதிர்வன்முறையைக் கிளப்பி விடுகிறது); இன்னொரு பக்கத்தில் போலியான தேசிய உணர்வுகளை உசுப்பேற்றி, ஒரு வல்லரசாக மாறுவதற்கான வேட்கையைத் தீவிரமாக முடுக்கிவிடுவது என்ற இந்தப் போக்கு நவீன- தாராளவாத காலகட்டத்தில் வேறெங்கும் நடப்பது போலவே இந்தியாவிலும் தொடர்ந்து செயல்படவே செய்யும். என்னதான் அதிக வளர்ச்சி வீதம் பற்றித் தடபுடலாக ஏதேதோ கூறப்பட்டாலும், அமைதியும் வளமும் மிகுந்த இந்தியா என்ற கனவு நனவாவது நம் கையை விட்டு நழுவிக்கொண்டேதான் இருக்கும். இந்துத்துவா சக்திகள் தற்போதைக்கு குழம்பிச் சிதறிக் கிடக்கலாம், கண்ணுக்கெட்டிய வரையில் தெரிகிற எதிர்காலத்திலும் தொடர்ந்து சிதறியே இருக்கலாம். ஆனால், அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட ஒடுக்குமுறையும் அத்துடன் இணைந்த வல்லரசு வெறியுணர்வு சார்ந்த அடிப்படை செயல்திட்டமும் தொடர்ந்து நம்மைப் பிடித்தாட்டிக் கொண்டேதான் இருக்கும். ஏனெனில், அந்த செயல்திட்டம் நவீன - தாராளவாத அரசின் அடிப்படைத் தன்மையோடு ஒத்திசைந்து போவதாகும்.

ஏராளமான மக்களை கைவிடப்பட்டவர்களின், ஓரங்கட்டப் பட்டவர்களின் அணிவரிசைக்குத் தள்ளிவிட்டு, எதிர்ப்புப் போராட்டங்களையும் அரசின் எதிர்வன்முறைகளையும் தூண்டி விடுபவை இந்தப் பொருளாதாரப் போக்குகள் மட்டுமேயல்ல. அத்தோடு கூடுதலாக, அரசு தனது சமுதாய அங்கீகாரத்தைப் புதுப்பித்துக்கொள்ளும் வழிமுறையாக "மக்களின் எதிரி" எனப் புனையுருவாக்கப்பட்ட ஏதோவொரு எதிரியை வீழ்த்துவதாய், தன்னிச்சையான காரணமற்ற வன்முறையை வலுக்கட்டாயமாகத் திணிக்கிற போக்கையும் கைக்கொள்ளும்.

# III

# அழிக்கப்படும் அரசியல்

"அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆக்கப் பணிகள்" - இன்று இந்த மந்திரம் எங்கும் ஒலிக்கிறது. நாட்டின் குடியரசுத்தலைவர் இதைத் தான் சொல்கிறார். பிரதமர் இதைத்தான் சொல்கிறார். வருகை தருகிற உலக வங்கி உயரதிகாரிகள் இதையேதான் சொல்கிறார்கள். உள்ளூர் அதிகார வர்க்கத்தினர் முதல் ஊடக மேதைகள் வரை இதே கருத்தைத்தான் எதிரொலிக்கிறார்கள். அரசியல் என்றால் வேறொரு கருத்தாக்கமாக, மாறுபட்ட உலகக் கண்ணோட்டமாக, மாறுபட்ட வர்க்க நிலைபாடுகளாக முன்வைக்கப்படுகிறது, மேலோங்கி வருகிறது. அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆக்கப் பணி எனக் கூறுவதன் மூலம், உண்மையான "மேம்பாடு" என்றதொரு கருத்தாக்கம் இருப்பது போலவும், அதுதான் எல்லாவற்றையும்விட மேலானதாக ஓங்கி யிருப்பதாகவும், அதற்கு எதிராக யாரும் கிளம்பக் கூடாது என்பதாகவும் வலியுறுத்தப்படுகிறது. அனைத்து வர்க்கங்களின் மீதும் அனைத்து அரசியல் சக்திகளின் மீதும் "மேம்பாடு" என்பது குறித்த ஒரு குறிப்பிட்ட கருத்தாக்கம் திணிக்கப்படுகிறது. அந்தக் கருத்தாக்கத்தைத் திணிப்பது உலக நிதி மூலதனம். இந்தத் திணிப்பு வெறும் பொருளாதார ஆளுமை தொடர்பானது மட்டுமல்ல, கருத்து ஆளுமையுமாகும். கருத்துப்பூர்வமான சர்வாதிகாரத்தை வளர்ப்பதே யாகும்.

இப்படிப்பட்ட ஒரு கருத்துப்பூர்வ சர்வாதிகாரத்தை வளர்ப்பது என்பது எப்போதுமே முதலாளித்துவ அமைப்பின் பண்புக்கூறாக இருந்து வந்துள்ளது. நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு எதிரான அறிவுக் களப் போராட்டத்தை நடத்திய முதலாளித்துவ அறிஞர்கள், "இயற்கையான ஒழுங்கமைப்பு" என்றொரு கருத்தாக்கத்தைக் கிளப்பி விட்டார்கள். தங்களது கோட்பாடுகள் யாவற்றையும் "இயற்கை விதிகள்" என்ற வடிவத்திலேயே வார்த்துக் கொடுத்தார்கள். ஏன் அப்படிச் செய்தார்கள் என்றால், அரசாங்கக் கட்டுப்பாடில்லாத வர்த்தக அமைப்பு என்பதாக அவர்கள் முன்வைத்த முதலாளித்துவ அமைப்பின் செயல்முறை, நிலப்பிரபுத்துவ வணிக அமைப்பிலிருந்து

மாறுபட்டது என்று வாதிட அவர்கள் விரும்பினார்கள். நிலப்பிரபுத்துவ அமைப்பில் ஏகபோக உடைமை, கட்டுப்பாடுகள், சிலருக்கு மட்டும் அரண்மனைச் சலுகைகள், ஆதரவுகள் என்ற சிக்கல்கள் காரணமாக பெருங்குழப்பமும் அராஜகமும்தான் விளைந்தன; ஆனால் கட்டுப்பாடுகளற்ற முதலாளித்துவ அமைப்பு ஒழுங்கையும் சமூக நிலையையும் கொண்டு வரும் என்றார்கள். அப்படிச் சொன்னால் மட்டும் போதாது என்பதால் அதற்கு விளக்கமும் அளிக்க வேண்டியிருந்தது. அப்படி அவர்கள் அளித்த விளக்கம்தான், இயற்கை விதிகளின்கீழ் முதலாளித்துவம் இயங்கும் என்பதாகும். இயற்கை எப்படி தனக்கென விதிகளை வகுத்துக் கொண்டிருப்பதாக அன்று தெரிய வந்திருந்ததோ, அதேபோன்ற இயற்கை விதிகள் அடிப்படையில் முதலாளித்துவம் இயங்கும் என்றார்கள். அதுவரையில் இருந்து வந்த கட்டுப்பாடுகளும் தலையீடுகளும்தான் "கட்டுப்பாடற்ற வர்த்தகத்தின்" இயற்கையான நிலைமைகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வந்தன என்றார்கள்.

கட்டுப்பாடற்ற வர்த்தகம் எப்போது வெற்றிகரமாக நடைமுறைக்கு வந்துவிட்டதோ, "இனிமேல்" அதன் பயனாக "இயற்கையான ஒழுங்கமைப்பு" நிலவியிருக்கும் என்று கூறினார்கள். "இதுவரையில் வரலாறு என ஒன்று இருந்து வந்தது; இனி அப்படி இருக்காது" என முதலாளித்துவவாதிகள் சித்தரித்ததாக கார்ல் மார்க்ஸ் தமது "மெய்யறிவின் வறுமை" என்ற நூலில் குறிப்பிடுகிறார். (அதாவது, "இதுவரையில் பல சமூக அமைப்புகள் மாறி மாறி வந்திருந்தாலும் இனி முதலாளித்துவ அமைப்புதான் மாறாமல் நிலைத்திருக்கும் என்று அவர்கள் வாதிட்டார்கள். - மொழிபெயர்ப்பாளர்). முதலாளித்துவவாதிகளின் இந்த வாதம், கருத்துப்பூர்வ சர்வாதிகாரப் பிரகடனமாகவும், ஒரு தெய்வ நிலைக்கு முதலாளித்துவத்தை உயர்த்தி வைப்பதாகவும் இருந்தது. ஹெகலியம் முன்வைத்த "இருத்தல்வாதம்" என்பதை - அதாவது எது இப்போது இருக்கிறதோ அதுதான் வரலாற்றின் இறுதிக் கட்டம் என்பதை - உயர்த்திப் பிடிப்பதாக இருந்தது. (இதன் எதிரொலியை ஃபியூக்குயாமா போன்ற இன்றைய ஆய்வாளர்களின் எழுத்துக்களில் காணலாம்.)

இப்படியொரு கருத்துப்பூர்வ சர்வாதிகாரம் என்பது இன்றைய ஆளும் வர்க்கங்களுக்கு மிக மிகத் தேவைப்படுகிறது. நவீன தாராளவாதக் கொள்கைகள் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளும் மிகப்பெரிய அளவுக்கு அதிகரிப்பதற்கு இட்டுச் சென்றுள்ளன. சிறு உற்பத்தியைக் கடும் நெருக்கடியில் தள்ளி விட்டுள்ளன. வேலையின்மை வீதத்தை அதிகப்படுத்தியுள்ளன. பட்டினி அளவையும் கடுமையாக அதிகரித்துள்ளன. இப்படியெல்லாம் நடக்கவில்லை என்று, நமது நாட்டு அனுபவங்களின் அடிப்படையில்

கூட மறுத்துவிட முடியாது. பொதுவாகப் பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில் நடந்தது போலல்லாமல், நமது நாட்டில் இந்த விளைவுகள் ஒரு கொள்ளை நோய் போல் ஏற்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

எனவே, இங்கே அரசியல் பற்றிய கேள்வி இன்றைய முதலாளித்துவ வாதிகளுக்கு இயற்கையாக ஏற்படுகிறது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற ஜனநாயகத் தேர்தல்கள் நடைமுறையில் இருக்கிறபோது எப்படித் தாக்குப் பிடித்திருக்க முடியும்? வேறு விதமாகக் கேட்பது என்றால், உலக நிதி மூலதன ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பொருளாதார ஒழுங்கமைப்பு ஜனநாயக அரசியலில் எப்படிப் பிழைத்திருக்க முடியும்? இந்தக் கேள்விக்கு பதிலாக, பன்னாட்டு நிதி மூலதனக்காரர்களும் அவர்களோடு கூட்டுச் சேர்ந்துள்ள உள்நாட்டு முதலாளிகளும் பலப்பல வழிமுறைகளைக் கையாள்கிறார்கள். அவற்றில் ஒரு வழிமுறைதான், ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் எந்தவொரு அரசியல் அமைப்பு ஆட்சிக்கு வந்தாலும், அதே நவீன தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்துவது.

# 1. தேர்வு உரிமை மறுப்பு

பலவித வழிமுறைகளில் இது உறுதிப்படுத்தப்படுகிறது. ஒரு வழிமுறை - நவீன தாராளவாதப் பாதையிலிருந்து விலகினால் முதலீடுகள் நாட்டை விட்டு வெளியேறிவிடும் என்ற பீதியைக் கிளப்பி விடுவதாகும். எல்லா அரசியல் அமைப்புகளிலும் (கட்சிகளிலும்) இந்த பீதி ஊன்றப்படுகிறது. அவ்வப்போது உண்மையாகவே இப்படி முதலீடுகள் வெளியேறுவதன் மூலம், சில நேரங்களில் திட்டமிட்ட சூழ்ச்சியாகவேகூட முதலீடுகள் வெளியேறச் செய்வதன் மூலம், அந்த பீதி அப்படியே பாதுகாக்கப்படுகிறது. மற்றொரு வழிமுறை - அதிகார வர்க்க ஆட்களிடையே ஏகாதிபத்திய முகமை நிறுவனங்களின் ஆட்களைப் பெருமளவுக்கு ஊடுருவச் செய்வதும், அதிகார வர்க்கத்தினரிடையே பெருமளவுக்கு நவீன தாராளவாதக் கருத்துக்கள் ஆக்கிரமிக்கச் செய்வதுமாகும். மிகப் பரவலான வலைப்பின்னல் அமைப்பு, பயிற்சித் திட்டங்கள், பயிலரங்குகள், "திறன் வளர்ப்பு" நடைமுறைகள் போன்ற ஏற்பாடுகள் மூலமாக இந்த ஆக்கிரமிப்பு நடத்தப்படுகிறது.

இங்கு நாம் விவாதிக்கிற மூன்றாவது வழிமுறை ஒன்று இருக்கிறது. இன்றைய நடைமுறைகள் எதுவானாலும், அவற்றை ஒரு நுட்பமான கோட்பாடு வடிவத்திற்கு உருமாற்றப்பட்ட கருத்தாக்கங்களாக்கித் தருகிறார்கள். அந்தக் கோட்பாடுதான் என்றென்றும் நிலைத்திருக்கும் உண்மை என்றும், அதுதான் "இயற்கை நிகழ்ச்சிப் போக்குகளோடு" அல்லது "மனித இயல்போடு" ஒத்துப் போவது என்றும் ஏற்றப்படுகிறது. "மேம்பாடு" என்ற கருத்தாக்கம் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும். ஆளுக்காள் இந்தக் கருத்தாக்கத்தைக் கட்டிவிட முயல்கிறார்கள். இந்த மூன்றாவது வழிமுறை, ஒரு கருத்துப்பூர்வ சர்வாதிகாரத்தைத் திணிக்கிற முயற்சியேயன்றி வேறொன்றுமில்லை. இவ்வாறு உருவேற்றப்படுகிற கருத்துச் சர்வாதிகாரத்திற்கு ஒரு அரசியல் பணி இருக்கிறது. மக்களுக்கு உள்ள அரசியல் தேர்வு உரிமையைத் தட்டிப் பறிப்பதுதான் அந்தப் பணி. அரசியலை அழிக்கும் கைங்கர்யத்தின் ஒரு பகுதி நடைமுறைதான் இது.

அரசியலை அழிப்பதன் பின்னணியில் ஒரு தொடர்ச்சியான தர்க்கவாத உத்தி இருக்கிறது. "மேம்பாடு" என்பது நவீன தாராள வாதத்தின் மிக உயர்ந்த புனிதமான கருத்தாக்கமாக வலியுறுத்தப் படுகிறது. அதில் கருத்துப்பூர்வ சர்வாதிகாரம் பிரதிபலிக்கிறது. அது, மாறுபட்ட மேம்பாட்டுப் பாதைகளில் தங்களுக்குத் தேவையானதை மக்களே தேர்வு செய்கிற அரசியல் உரிமையை நிராகரிக்கிறது. அதை நியாயப்படுத்த "அரசியல் படுபாதாள நிலைக்குப் போய்விட்டது" என்றும், "அரசியல் கட்சிகள் எல்லாம் சுயநல நோக்கத்தோடுதான் செயல்படுகின்றன" என்றும், "அரசியல்வாதிகளிடையே ஊழல் ஊறிப்போய்விட்டது" என்றும், இதுபோல் இன்னும் பல வகைகளிலும் திரும்பத் திரும்ப சொல்லப்படுகிறது. அரசியலில் ஈடுபடுவோரின் தரம் தாழ்ந்துள்ளது என்ற அனுபவ உண்மையைக் காட்டி, மக்களின் அரசியல் தேர்வுரிமை மறுக்கப்படுகிறது. "தொழில் துறையின் தானைத் தலைவர்கள்" என்றும் "தொழில் முனைவோர்" என்றும் கூறப்படு கிறவர்களோடும் - பத்திரிகைத் துறையில் உள்ள சில தொழில் முனைவோரோடும் கூட - "நேர்மையான கறாரான" அதிகாரி களோடும் இப்படிப்பட்ட அரசியல்வாதிகள் சாதகமற்ற முறையில் முரண்படுகிறவர்களாகக் காட்டப்படுகிறார்கள். மேற்படி தொழில்துறைத் தளபதிகளும், தொழில்முனைவோரும், அதிகாரிகள் போன்றோர் இந்த நுட்பமான ஏற்பாட்டில், நவீன தாராளவாத மேம்பாட்டுத் திட்டங்களை உயர்த்திப் பிடிப்போராக, மேம்பாட்டுக்கு உறுதியளிப்போராக, அதனை உருவாக்குவோராக சித்தரிக்கப்படு கிறார்கள்.

இத்தகைய கருத்தாக்கங்களின் ஆதிக்கத்தால், அரசியல் கட்சிகள் பீதி வசப்பட்டவையாக, எந்தவொரு மாற்று மேம்பாட்டுத் திட்டத்தையும் முன்வைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன. கருத்தாக்கங்களின் வர்க்கத் தன்மை பற்றிய தத்துவார்த்தப் புரிதல் உள்ள இடதுசாரிக் கட்சிகள் மட்டுமே இதற்கு விதிவிலக்கு.

விரிந்து பரந்ததாக உள்ள மற்ற அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில், வலதுசாரிக் கட்சி முதல் இடது சாய்வுள்ள நடுவாந்திரக் கட்சி வரை, மேம்பாட்டுப் பிரச்சனைகளில் இக்கட்சிகளுக்கு உள்ள கருத்து வேறுபாடுகள் பின்னுக்குச் சென்று காணாமல் போய்விடு கின்றன.

ஏனெனில் இக்கட்சிகள் எல்லாமே, மேற்படி நுட்பமான பொருளில், "மேம்பாடு" என்பதன் கைதிகளாக மாறிவிடுகின்றன. இக்கட்சிகளுக்கிடையேயான கருத்து மோதல்கள் எப்படித் தீர்க்கப்படுகின்றன என்றால், மாற்றுத் திட்டங்களுக்கிடையே தங்களுக்குத் தேவையானதை மக்களே தேர்வு செய்துகொள்வதன்

மூலமாக அல்ல. மாறாக, பணபலம், தோள்பலம், சந்தர்ப்பவாதக் கூட்டணி அரசியல் ஆகியவற்றின் மூலமாகத் தீர்க்கப்படுகின்றன. அதேபோல், இக்கட்சிகளிடையே, பொருளாதார செயல் திட்டம் பின்சவாரி செய்வதாக மாறிவிடுகிறது என்பதால், அறிவுப்பூர்வமான, உணர்வுப் பூர்வமான இளைஞர்களை ஆற்றல் மிக்க தலைவர்களாக இக்கட்சிகளால் தமது அணிகளுக்குள் ஈர்க்க முடிவதில்லை. இந்த இளைஞர்களின் சமூகக் கடமையுணர்வும் கூர்மையாகச் சரிவடைகிறது. வேறு சொற்களில் சொல்வதானால், பன்னாட்டு நிதி மூலதனத்தால் பரப்பப்படுகிற "மேம்பாடு" என்ற கருத்தாக்கத்தின் ஆதிக்கமே, அரசியல் செயல்பாட்டாளர்களின் தரம் மேம்பாடு அடையாமல் தாழ்ந்துபோவதற்குக் காரணமாகிறது.

இவ்வாறாக, "அரசியல்வாதிகள்" தரம் தாழ்ந்துவிட்டார்கள் என்ற அம்சத்தைப் பயன்படுத்தித்தான் "மேம்பாடு" என்ற நவீன தாராளவாதக் கருத்தாக்கத்தை மிகப் புனிதமானதாக உயர்த்துகிற முயற்சி நியாயப்படுத்துகிறது. (இதற்கு விதிவிலக்காக இடதுசாரிகள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை மட்டும் ஒருபோதும் உரத்துச் சொல்லப்படுவதில்லை). அதே நேரத்தில் இப்படி "அரசியல்வாதி" தரம் தாழ்வதற்கே மேற்படி புனிதமயமாக்கல்தான் ஓரளவுக்காவது காரணமாகிறது. முதலாளித்துவ அரசியல்வாதிகள், சிறு முதலாளித்துவ அரசியல்வாதிகள் ஆகியோரின் தரம் தாழ்வதற்கு வர்க்கம் சார்ந்த காரணங்கள் கண்டிப்பாக உள்ளன; ஆனால், நவீன தாராளவாத "மேம்பாடு" என்பதன் கருத்துப்பூர்வ ஆதிக்கமும் இதற்கு நிச்சயமாகப் பங்களிக்கிறது.

# 2. அடியறுக்கப்படும் அரசியல் தலைமை

ஆக, அரசியலை அழித்தொழிக்கிற நடைமுறை இன்றைய உலகமயமாக்கல் யுகத்தின் ஒரு அடிப்படை அம்சமாக இருக்கிறது. இது வெளிப்படுத்தப்படுவது, "மேம்பாடு" என்ற நவீன தாராளவாதக் கருத்தை மிக நுட்பமான உண்மையாக உயர்த்துவதன் மூலமாக மட்டுமல்ல. இந்த மேம்பாட்டு வியூகத்தின் மூலகர்த்தாக்களாகிய "தொழில் துறைத் தளபதிகள்", பன்னாட்டு நிறுவனங்களின் தலைவர்கள், தொழில் முனைவோர் எனப்படுவோர், "நேர்மையான அதிகாரிகள்" எனப்படுவோர் ஆகியோரை சமூக முன் மாதிரிகளாக - ஏன் அரசியல் தலைவர்களாகக்கூட - உயர்த்துவதன் மூலமாகவும் இது வெளிப்படுகிறது. நமது நாட்டின் மிக உயர்ந்த அரசியல் பதவிகள் இரண்டிலுமே இன்று, கடந்த கால அரசியல் பின்னணி இல்லாத அதிகார வர்க்க அணியிலிருந்து வந்தவர்கள்தான் அமர்ந்திருக்கிறார்கள் என்பதிலிருந்து இந்த நிலைமையைப் புரிந்து கொள்ளலாம். அந்த இருவருக்கும் அரசியல் சார்ந்த கடந்த காலப் பின்னணி என்பது இல்லை என்பது மட்டுமல்ல, ஒருபோதும் இவர்கள் தேர்தல் மூலம் மக்களை அணுகியதில்லை என்பது மட்டுமல்ல, அதற்காகப் பெருமிதம் கொள்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். அதனால்தான், மேம்பாடு என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்டதாக வைத்திருக்க வேண்டும் என்று ஒரு ஈடுபாட்டுணர்வோடு அவர்களால் பேச முடிகிறது.

அரசியலை அழிப்பது என்பது, நவீன தாராள வாதத்துக்கு எதிரான எந்தவொரு சவாலையும் தடுத்துக் குலைப்பது மட்டுமல்ல; நாடு இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிற துயரங்களை மேலும் பெருக்குவது மட்டுமல்ல; மக்கள் தங்களுக்குத் தேவையான பாதையைத் தாங்களே சுதந்திரமாகத் தேர்வு செய்வதற்கான மாற்று வாய்ப்புகளை மறுப்பது மட்டுமல்ல; அதாவது ஜனநாயகத்தை மறுப்பது மட்டுமல்ல; எல்லாவற்றுக்கும் மேலாக, மக்களின் அரசியல் பங்கேற்பைத் தடுப்பதாகும். அர்த்தமுள்ள அரசியல் பங்கேற்பு என்பது மக்களின் தன்னாளுமையை உறுதிப்படுத்துகிற ஒரு வழிமுறை

எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு உட்படுகிறவர்களாக அல்லாமல், தங்களது வாழ்க்கையைத் தாங்களே வடிவமைக்கிறவர்களாக, முடிவுகளை எடுக்கக்கூடியவர்களாக மாறுகிற ஒரு வழிமுறைதான் அரசியல் பங்கேற்பு. அரசியல் என்பது பொருளாதார மாற்றத்துக்கான ஒரு கருவி மட்டுமல்ல, ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களைத் தாங்களே உறுதிப்படுத்திக்கொள்கிற ஒரு வடிவமுமாகும். உலகமயமாக்கல் கோட்பாடும் நடைமுறைகளும் அரசியலை அழிக்க முயல்வதன் மூலம் மக்களின் இந்த வழிமுறையை நிராகரிக்க முயல்கின்றன.

# 3. கருத்தாக்கங்களின் வர்க்கத்தன்மை

ஆனால், உலக மயமாக்கல் இப்படி அரசியலை அழிக்க முயன்றாலும், அரசியல் வேறு வடிவத்தில் மறுபடியும் காட்சிக்கு வரவே செய்கிறது. யுத்தம் என்பது ஒருமாறுபட்ட வடிவத்தில் அரசியலின் தொடர்ச்சியேயாகும் என்கிறார் ஆய்வாளர் கிளாஸ்விட்ஸ். பொதுவாக, அரசியல் என்பது அதன் அறிவுப்பூர்வ நியாயமான வடிவத்தில் அதற்குரிய நியாயமான வெளி இல்லாமல் தடுக்கப்பட்டாலும் கூட, அறிவுப்பூர்வமற்ற நியாயமற்ற எல்லா வடிவங்களிலும் அது மீண்டும் தலைதூக்குகிறது. பயங்கரவாதம், சகோதரப் படுகொலைகள் போன்ற வன்முறை மிக்க, எவ்வித ஆக்கப் பூர்வ விளைச்சல்களையும் கொடுக்காத வடிவங்களில் அரசியல் மறுபடி தோன்றுகிறது. ஆகவே, அரசியல் அழிக்கப்படுவதற்கு எதிரான போராட்டம், அரசியலின் அறிவுப் பூர்வமற்ற நியாயமற்ற வடிவங்களுக்கு எதிரான போராட்டமுமாகிறது. இந்தப் போராட்டத்தில் ஜனநாயக சக்திகள் உணர்வுப்பூர்வமான உந்துதலுடன் இணைந்தாக வேண்டியுள்ளது.

எதையும் வர்க்கக் கண்ணோட்டத்தில் காண்பது லெனினின் ஒரு சிறப்பு குணமாகும். ஒருமுறை, லெனின் நாடு கடத்தப்பட்டு லண்டனில் இருந்தபோது, அவரைச் சந்திக்க ஒரு இளம் தோழர் தாய்நாட்டிலிருந்து வந்திருந்தார். சிறந்த விருந்தோம்பல் பண்பு கொண்டவரான லெனின் அந்த இளைஞரை லண்டனின் பல்வேறு முக்கிய இடங்களுக்கு அழைத்துச் சென்று சுற்றிக் காட்டினார். "இதோ இதுதான் அவர்களுடைய டிரபால்கர் சதுக்கம்," "இதுதான் அவர்களுடைய வெஸ்ட்மின்ஸ்டர் பாலம்", "அவர்களுடைய புனித பால் தேவாலயத்தை உனக்குப் பிடித்திருக்குமே" என்றெல்லாம் ஒவ்வொரு இடமாகக் காட்டி விளக்கினார். லெனின் பற்றிய நினைவுக் குறிப்புகளை எழுதிய அவரது காதல் மனைவி க்ருப்ஸ்கயா இப்படி லண்டனில் அவர் "அவர்களது" "அவர்களது" என்று அடையாளப் படுத்தியது ஏன் என விளக்கமளித்துள்ளார். தாமும் அந்த இளம் தோழரும் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், அந்த வரலாற்றுச்

சின்னங்கள் ஆங்கிலேயர்களுடையவை என்பதாலும் லெனின் அவ்வாறு குறிப்பிடவில்லை. மாறாக, அவற்றைக் கட்டியெழுப் பியவர்கள் ஆளும் வர்க்கத்தினர் என்பதால் அவ்வாறு குறிப்பிட்டார். "அவர்கள்" என்ற சொல்லை ஆங்கிலேயர்களை அல்ல, ஆள்வோரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தினார் லெனின். இன்று, அனைத்துக்கும் மேலாக அரசியல் அழிக்கப்படுவதற்கு எதிரான போராட்டம் "அவர்களுக்கு" எதிராக நடந்தாக வேண்டும். அந்தப் போராட்டம் ஆளும் வர்க்கங்களிடமிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டிடும் வகையில் தொடர்ச்சியான, உறுதியான, திட்டவட்டமான வடிவம் கொள்ள வேண்டும்.

*("பீப்பிள்ஸ் டெமாக்ரசி" ஜனவரி 07, 2007)*

▲▲▲▲▲

இன்று உலகளாவிய நிதி மூலதனத்தோடு மிக நெருக்கமாகப் பின்னிப்பிணைந்துள்ள முதலாளித்துவ அரசுக்கு ஒரு புதிய சமுதாய அங்கீகாரத்தைத் தயாரிப்பதற்காக, மேற்கூறிய சூழலில் ஒரு புதிய எதிரி - "பயங்கரவாதம்" என்ற புதிய எதிரி - மிகப்பெரிதாக உருவாக்கப்படுவதிலும், ஒரு மதவாத - வகுப்புவாத உணர்வு வளர்க்கப்படுவதிலும் வியப்பில்லை. "பயங்கரவாதம்" என்பது உண்மையாகவே இருப்பதை (அதனை வளர்த்துவிட்டதே ஏகாதிபத்தியம்தான் என்றாலும் கூட) மறுப்பதற்கில்லை. ஆனால், இங்கு காணப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால், அதனை எதிர்கொள்வதற்காக பணக்கார நாடுகளின் அரசுகள் - குறிப்பாக அவற்றின் தலைமைப் பாத்திரத்தை வகிக்கும் அரசு - கடைப்பிடிக்கும் வழிமுறை, "பயங்கரவாத" அச்சுறுத்தலை உயிரோடு வைத்திருப்பதாகவே இருக்கிறது. ஈராக் நாட்டை ஆக்கிரமித்திருக்கும் செயல் இதனைத் தெளிவாக மெய்ப்பிக்கிறது.

ISBN 81-89909-14-2
9788189909147

tamizhbooks இணைய இதழ்
பாரதி புத்தகாலயம்
புதிய புத்தகம் பேசுது